லோகநாதன்
இன்ஸ்ரிரியூட்
(MAIN)
84, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்,
★ I.C.M.A. ★ I.A.A.
★ A.C.C.A.
★ Chartered Prelim
(தனி பாடங்களும்)
விபரங்களுக்கு :
நேரில் / தபாலில்

பக்கங்கள் 8

ஈழநாடு EELANAADU

50 சதம்

மலர் [illegible] சித்திரை 11 ஜு-ஆகிர் 7 இதழ் 73
யாழ்ப்பாணம் புதன்கிழமை 23-4-80

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS ★ LIBRARY ★
RECEIVED 1980-4-23
PERIODICALS DIVISION

## அஸாம் விவகாரம்

(கௌஹாத்தி)
இந்திய மத்திய அரசும் அஸாம் மாநில அரசும் நீதிமன்ற உத்தரவை மீறியதற்கு இரு அரசுகளின் மீதும் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கு விளக்கமளிக்குமாறு அஸாம் உயர்நீதிமன்றம் மத்திய, மாநில அரசுகளைக் கேட்டுள்ளது.

இன்று புதன்கிழமை இவ்வழக்கு விசாரணை நடைபெறுகிறது. [இ]

# இலங்கையில் அரசியல் அகதிகள் எவரும் இல்லை

## லண்டனில் பிரதமர்

[லண்டன்]
"இலங்கையில் இனங்களுக்கிடையே பாகுபாடுகள் காட்டப்படுவதாக முன்னர் கூறி வந்த அரசியல்வாதிகள் கூட இன்று சகல மக்களும் இலங்கையில் சுயமரியாதையுடன் வாழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளனர். இந்நிலையில் இலங்கையில் தாம் ஒதுக்கப்படுவதாகவும் அரசியல் அகதிகள் என்றும் கூறி வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துவரும் இலங்கை இளைஞர்களின் செயல் அர்த்தமற்றது".

இவ்வாறு இலங்கைப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா லண்டனில் வாழும் இலங்கையர் முன்னிலையில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர்மேலும் கூறியதாவது:
"இலங்கையில் இன ஒற்றுமைக்கு உரமூட்டக்கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை வாழ் சகல இன மக்களினதும் அடிப்படை உரிமைகளுக்கு புதிய அரசியல் அமைப்பின் மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அரசியல் அகதிகள் என்று கூறக்கூடிய எவரும் எமது நாட்டில் இடையாது என்பதை உறுதியாகக் கூறுகிறேன்" என்ருர். [இ]

## டிட்டோவின் உயிர் ஊசலாடுகிறது

பெல்கிரேட், ஏப் 23
யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல்டிட்டோ இன்னும் ஓரிரு தினங்கள்கூட உயிர்வாழமாட்டார் என அவரைப் பரிசோதித்த டாக்டர்கள் தெரிவித்தனர். (இ)

## கனகரின் பூதவுடலுக்கு அமைச்சர்கள் அஞ்சலி
### இன்று மாலை தகனக்கிரியை

(மட்டக்களப்பு)
காலஞ்சென்ற மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் அமரர் திரு. கனகரத்தினத்தின் பூதவுடல் இன்று மாலை கல்லடி கடற்கரையில் தகனம் செய்யப்படும்.

இறுதி அஞ்சலி செலுத்தும் பொருட்டு அமைச்சர்கள் ஈ. எல். சேனநாயக்கா, கே. டபிள்யூ. தேவநாயகம், மற்றும் திரு வீரசிங்கமல்லிமாராய்ச்சி உட்பட சில அமைச்சர்கள் விமானப் படையின் விசேஷ விமானத்தில் இன்று மட்டக்களப்பு வருகின்றனர்.

### மகனுக்கு அனுமதி

இதற்கிடையே, திரு கனகரத்தினத்தின் பூதவுடலைத்

(8-ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் பிரேமாவுக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(லண்டன்)
இலங்கைப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவுக்கு லண்டனில் இளைஞர்கள் பலர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

லண்டனிலுள்ள தேசிய பிரச்சார நிலையத்துக்கு பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா சென்றுகொண்டிருந்தபோது வழியில் கறுப்பு நிற உடைகள் அணிந்த இளைஞர்கள் பலர் எதிர்ப்பு சுலோகங்களைக் கையிலேந்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## "சமதர்ம தமிழீழம் மலர எம்மை அர்ப்பணிப்போம்"
### மாவை சேனாதிராசா அறிக்கை

[யாழ்ப்பாணம்]
"தமிழீழத்தின் இழந்துவிட்ட சுதந்திரத்தைமீட்டுச் சமதர்மத் தமிழீழத்தை அமைத்திட- விடுதலை இயக்கத்தைக் கட்டியெழுப்பிட, எம்மை அர்ப்பணித்து விடுவோம். அதற்காக நாம் நிதானத்துடனும் கட்டுப்பாட்டுடனும் இயங்கிடுவோம். அதற்காக நான் ஒயுதல் செய்யேன்-தலைசாயுதல் செய்யேன். என்னையே பலிக்களத்தில் படைத்திருக்கின்றேன்".

இவ்வாறு திரு. மாவை சேனாதிராசா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிப்பதாவது;

"நான் தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து, இளைஞர் இயக்கச் செயலாளர், மத்திய செயற்குழு உறுப்பினர், நடவடிக்கைக்குழு உறுப்பினர் பொறுப்புக்களிலிருந்து விலகுவதற்கான கடிதத்தை தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பித்துவிட்டேன் என்ற செய்தி, நாளேடுகளில் வெளிவந்திருக்கிறது இச்செய்தி தமிழ் மக்களிடமும் ஏனைய கட்சிகள், இயக்கங்களிடமும் பலதரப்பட்ட விமர்சனங்களை உருவாக்கியிருக்கின்றது. "கூட்டணியிலிருந்து மாவை சேனாதி ஒதுங்குகிருர்" என்று ஒரு ஏட்டில் வெளிவந்திருப்பது, தமிழீழ விடுதலைப் போராட்டத்திலிருந்து ஒதுங்குகிறேனே என்ற ஐயத்தை தமிழீழ இயக்கவாதிகளிடத்திலும், இலட்சியவாதிகளிடத்திலும், குறிப்பாக இளைஞர் சமுதாயத்திடமும் வேதனையைத் தந்திருப்பதை இந்த நான்கு ஐந்து நாட்களிலேயே அறிந்துகொண்டேன்.

"தந்தை செல்வாவுடனும், அமிர் அண்ணுவுடனும் தமிழரசுக்கட்சியிலும், தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் எனது [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ்நகர் மக்களுக்கு
மகிழ்ச்சிகரமான செய்தி

உங்கள் உல்லாச சவாரி
"யமஹா"வில் இருக்கட்டும். நீடிய பாவனை,
தரமானது, வர்ண நிறங்களில்
எம்மிடம் கிடைக்கின்றது.
யமஹா RX - 125 - RS 100
மோட்டார் சைக்கிள்கள்
கடற்றொழிலாளர்களின் தேவைக்கு
8 BK வெளியிணைப்பு
இயந்திரங்கள்
அனைத்திற்கும் நினைவில் நிற்கும் ஸ்தாபனம்
நியூ கெங்கா
றேடிங் சென்ரர்
76 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
5560

பல லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த

# கடலில் மிதந்துவந்த 32 பீடிப்புகையிலை மூடைகள்!

## கடத்தல்காரர்களால் கைவிடப்பட்டதா?

(யாழ்ப்பாணம்)
கடலில்மிதந்துவந்த லட்சரூபா பெறுமதியுள்ள பீடிப்புகையிலை மூடைகளைப் பொலிசார், கடற்படையினர், சுங்கப் பகுதியினர் ஆகியோர் தனித்தனியே கண்டெடுத்துள்ளனர்!

ஊர்காவற்றுறைக் கடலில் மிதந்து வந்த 32 பீடிப்புகையிலை மூடைகளில் 26 மூடைகளை ஊர்காவற்றுறைப்பொலிசாரும், 5 மூடைகளை சுங்கப் பகுதியினரும், ஒரு மூடையை கடற்படையினரும்கண்டெடுத்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட புகையிலை மூடைகள் இந்தியாவில் இருந்து கடத்திவரப்பட்டிருக்க வேண்டுமெனவும், காவல் படையினரைக் கண்ட கடத்தல்காரர்கள் பீடி இலை மூடைகளைக் கடலில்வீசிவிட்டுத் தப்பிச்சென்றிருக்கவேண்டும் என்றும் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

இன்னும் பல பீடிப்புகையிலை மூடைகள் கடலின் அலைகளால் தள்ளப்பட்டு, வேறு திசைகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டிருக்கலாமெனவும் பொலிசார் கருதுகின்றனர்.

மூன்று இலாகாவைச் சேர்ந்தவர்களும், வேறு பீடிப்புகையிலை மூடைகளைத் தேடிக் கடலில் வேட்டை நடத்தி வருகின்றனர்.

கடலில் இருந்து கண்டெடுக்கப்பட்ட பீடிபுகையிலை மூடைகளில் ஆறு, நேற்று சுங்கப் பகுதியினரால் ஏலத்தில்விடப்பட்டபோது 43,000 ரூபாவுக்கு பீடிப்புகையிலை விற்பனையானது. மிகுதி 26 பீடிப்புகையிலை மூடைகளும் நாளை மறுதினம் ஊர்காவற்றுறை சுங்க அலுவலகத்தில் ஏலத்தில்விடப்படும். (கொ)

## இன்று திரும்புகிருர்

(கொழும்பு)
பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா இன்று காலை லண்டனிலிருந்து கொழும்பு திரும்புகின்ருர். [ம]

சுங்க
ஏலவிற்பனை

கீழ்க்காணும் பொருட்கள் 1980ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 24ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஊர்காவற்றுறை சுங்க அலுவலகத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். விற்பனையின் முழு நிபந்தனைகள் 1954-ம் ஆண்டு மே மாதம் 28ம் திகதி வெளியிடப்பட்ட 10675ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் 1ம் பிரிவு 2ல் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

1. 26 கட்டு பீடிஇலைகள்

எஸ். எம். ஜே. சேனரத்தின,
உதவி சுங்க சேகரிப்பாளர்,
யாழ். மாவட்டம்.

சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம்
22-4-1980 5566

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

ஒரு அவுன்ஸ் எசன்ஸ் வெற்றுப் போத்தல்கள் மூடியுடன் விலைக்கு பெற்றுக்கொள்ளுவோம். ஸ்ரீ சாயிஸ்ரோஸ் 141 ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை 2-ம் கட்டிடம் யாழ்ப்பாணம். தொலைபேசி: 660
5560

தியேட்டர் ஒபரேட்டரும் (Operator), புக்கிங்கிளார்க்கும் (Booking Clerk), உடன் தேவை. இரண்டு கடமைகளையும் செய்யக்கூடியவர் விரும்பத்தக்கது. சான்றிதழ் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். மோகன் சினிமா, உயிலங்குளம், மன்னார்.
5557

மில்லில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. தேவாஸ் கிறைண்டிங் மில், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
5545

அனுபவமுள்ள லேதீமன் (Lathemen) தேவை. விண்ணப்பிக்கவும் / நேரில் வரவும். எம். எஸ். கந்தசாமி, 76, பலாலி ரோட், இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.
5548

குளிர்பான, தேனீர்ச்சாலை ஒன்றிற்கு சப்ளையர்களும், சமையல்காரர்களும் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். லக்கி ஹவுஸ், பஸ் நிலையம், காங்கேசன்துறை.
5526

மன்னார் பசாரில் மொத்தமாகவும், சில்லறையாகவும், எந்தத் தொழிலை செய்யவும்; எல்லா வசதிகளுமுள்ள தொடராகக் கட்டப்பட்ட கடைகள், உண்டு. பங்காகவோ அல்லது வேறு அடிப்படையிலோ, தொழில் செய்ய விரும்புபவர்கள், கீழ்க்காணும் முகவரியிலோ, அல்லது நேரிலோ தொடர்பு கொள்ளலாம். மனேஜர், சிங்கர் கம்பனி, யாழ்ப்பாணம். அல்லது டோன் ஸ்ரோர்ஸ், 205, 2-ம் குறுக்குத்தெரு கொழும்பு.
5524

### வகுப்புகள்

ஆவணி, மார்கழி G. C. E. O. L. புதிய வகுப்புகள் 23-4-80இல் ஆரம்பமாகும் பாடசாலைப் பிள்ளைகளுக்கு மாலை வகுப்புகள் நடத்தப்படும். 1981 ஆம் ஆண்டுக்குரிய பௌதிகவியல் வகுப்புகள் 26-4-80இல் ஆரம்பமாகும். ஆவணி 1980ஆம் ஆண்டுக்குரிய மின்னியல் மீட்டல் வகுப்புகளும் அன்று ஆரம்பமாகும் தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆங்கில (Spoken) வகுப்புகளும் A. L. 1980, 1981க்குரிய கலை வர்த்தக வகுப்புகளும் நடைபெறுகின்றன. யாழ்ப்பாண கல்வி நிலையம், 22, இராமையா செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சாந்தி படமாளிகைக்குமுன்).
5554

### தவறிவிட்டது

19-ந் திகதி சனிக்கிழமை மாலை, நீர்வேலியில் இருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் பருத்தித்துறை வீதியில் டிரைவிங் லைசன்ஸ், இன்சூரன்ஸ் பத்திரம், காசோலை புத்தகம், அடங்கிய பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கி. பத்மநாதன், 20 பிரவுண் வீதி, நீராவியடி என்னும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
5565

### பயிற்சி

வெளிநாடுகளில் தொழிலை எதிர்பார்ப்பவர்களே! பாடசாலையால் வெளியேறிய மாணவர்களே! ஆறுமாதகாலத்தில் சிறந்த செய்முறைப் பயிற்சியுடன் கூடிய புதிய வகுப்புக்கள் 1-5-80ல் ஆரம்பம். எலெக்றிக் வயறிங், வெல்டிங், மோட்டோர் மெக்கானிசம் ஆகியவற்றில் பகல், மாலை, வார இறுதி வகுப்புகள் நடைபெறவுள்ளன. விபரங்கட்கு! Patrician Industrial Institute, 59, St. Patricks Rd, Jaffna.
5479

சி. கனகரத்தினம்
ஜே. பி. யூ எம்.
உதவியாளர்.
கனகரத்தினம் கேசவன்.
சட்டத்தரணிகளும்
பிரசித்த நொத்தாரிசும்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல: 84 அ—பிரிவுகள் 524, 532

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை இராமநாதன், 11/12, சப்பிக் காவத்தை, கொழும்பு—10. என்பரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

சங்கரப்பிள்ளை கைம்பெண் இராசம்மா, 109, கச்சேரி நல்லூர் ரோட்டு, நல்லூர், யாழ்ப்பாணம்.

மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் ) இல ரி 3295

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ளஆள் எவரும், 1980 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 23 ஆந் நாளன்று முற்பகல் 9.00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி.
பொ. பாக்கியநாதன்.
(ஒப்பம்)
பதிவாளர்

1980 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 20 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
5562

## ஒரே சூலில் 3 குழந்தைகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று முன்னம் ஒரே சூலில் மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்த தாயும் சேய்களும் சுகமாக இருக்கின்றனர்.

நாவாந்துறை வடக்கைச் சேர்ந்த திருமதி பிரான்சிஸ் என்பவர் நேற்று முன்தினம் பிரசவத்துக்காக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோது முதலில் 3 றாத்தல் நிறையுள்ள ஆண் குழந்தையையும் பின்னர் 2 பெண் குழந்தைகளையும் [இருவரும் முறையே 3 றாத்தல் 8 அவுன்ஸ், 3 றாத்தல் 10 அவுன்ஸ்.] பிரசவித்தார். தாயும் சேய்களும் சுகமாக இருப்பதாக சம்பந்தப்பட்ட வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர், (கொ)

## ஆழியவளை மக்கள் போக்குவரத்துக் கஷ்டம்

(சங்கிலிப்பள்ளி)

யாழ்ப்பாணம்—ஆழியவளைப் பாதையில் சேவையில் ஈடுபட்டு வந்த இரண்டு பஸ்களில் ஒன்று சில மாதங்களுக்கு முன்பு விபத்துக்குள்ளாகியதால் இச்சேவை மிகவும் சீர்குலைந்துள்ளது. தற்போது ஒரு பஸ் மாத்திரமே இப் பாதையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளாகிய பஸ்ஸுக்கு பதிலாக வேறு பஸ் பாதையில் சேவையில் ஈடுபடுத்தப்படாமையினால் இப்பகுதிப் பிரயாணிகள் பெரிதும் கஷ்டமடைகின்றனர்.

## காற்றாடி இயந்திரம்

(பச்சிலைப்பள்ளி)

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மண்டலாய் விவசாயத் திட்டத்தில் காற்றாடி மூலம் நீரிறைக்கும் இயந்திரம் பரீட்சார்த்தமான முறையில் பொருத்தப்படவிருக்கிறது. இம்முயற்சி வெற்றியளிக்குமானால் மண்டலாய் வாய்க்காலிலிருந்து நூற்றுக்கணக்கான ஏக்கர் தோட்ட நிலங்கள் நீர்ப்பாசனத்தைப் பெறக் கூடியதாகவும் எரிபொருள் செலவினத்தைமீதப்படுத்திக்கொள்ளக் கூடியதாகவுமிருக்கும்.

இதற்கான செலவினத்தின் ஒரு பகுதியினை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் திரு. க. கிட்ணர் மேற்கொண்டுள்ளார். பரீட்சார்த்த முயற்சிக்கு முன்னியான் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. கே. வி. சதாசிவத்தின் பயிர்ச்செய்கை நிலம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. (அ)

## நன்றி நவிலல்

19-4-80-ந் திகதி நடைபெற்ற எமது மகள் செல்வி. கல்யாணியின் பூப்பு மங்கள நீராட்டு விழாவின் போது நேரில் வருகை தந்தும், வாழ்த்துக்கள் அனுப்பியும் பரிசில்கள் வழங்கியும், ஒத்துழைப்பும் நல்கியும் எம்மை மகிழ்வித்த ஊரார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் தனித்தனி நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

இ. செல்லையாவும் (செல்லப்பா) துணைவியும். நயினாதீவு-5.
5564

## வேலைவாய்ப்பு

மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்புக்கள்

தொழில் தெரிந்தவர்கள் பாஸ்போட்டுடன் பின்வரும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும்

எஸ். பத்மநாதன் ஜே. பி.
49, (144) மாணிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
லேபர் [illegible]

## Y. M. C. A.

### வாலிபர் பயிற்சி நிலையம், பரந்தன்.

### வேலைக்கள உதவியாளர்

(FIELD,ASSISTANT - WORK SHOP)

பின்வரும் தகைமை உடையவர் வேலைக்கள உதவியாளர் பதவிக்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு 5-5-1980க்கு முன்பதாக விண்ணப்பிக்கவும்.

தகைமை: ஐந்துவருட பொறியியல், தளபாட கட்டிட வேலைகள் அனுபவமும், அறிவும் தேவை.

சம்பளம்: முதல் ஆறு மாதங்கட்கும் முழுக் கூட்டுத் தொகையாக மாதம் ரூபா 355/- கொடுக்கப்படும். அதன்பின் பின்வரும் சம்பள அடிப்படையில் கொடுக்கப்படும்.

ரூ 250 - 15 10 - 400 சக அரசாங்கத்தால் கொடுக்கப்படும் தற்போதைய அலவன்சுகளும் கொடுக்கப்படும்.

இயக்குநர்
Y. M. C. A. வாலிபர் பயிற்சி நிலையம்,
பரந்தன்.
5553

## நீதிமன்ற விற்பனவு

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

இல. ஈடு / 1004.

1. பொன்னையா தியாகராசாவும் பெண்
2. செல்வராணியும் இருவரும்

5-ம் வட்டாரம், மண்கும்பான் — வழக்காளிகள்.

எதிராக

கணபதிப்பிள்ளை வியாகரத்தினம்,
6-ம் வட்டாரம், மண்டைதீவு. — எதிராளி

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு/1004-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த விற்பனவுக்கான அதிகாரத்தின்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1980-ம் ஆண்டு சித்திரை மாதம் 30-ந் திகதி [30-4-1980] புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 3470-00-ம் 25-9-78 தொடக்கம் 6-7-79 வரைக்கும் ரூபா 2000/-க்கு 18 வீதவட்டியும், அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 540-95.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டிக் கோவிற்பற்று மண்டைதீவு இறை "ஊரிவயல்" ஏக்கர் 2 பேட்செஸ் 2 எல்லைகிழக்கு வியாகரத்தினம் பெண் மகேஸ்வரியின் ஆதனம். வடக்கு எனது (ஈடு வைத்தவரின்) ஆதனம். மேற்கு முடிக்குரிய ஆதனம். தெற்கு ரோட்டு இதடங்கலும்.

நீ. அன்ரனிப்பிள்ளை,
விற்பனவுக் கொமிஷனர்,
22, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். 28-3-1980.
5559

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல ஈடு / 2346

இறந்துவிட்டார். முருகப்பா கைம்பெண் தெய்வானைப்பிள்ளை, சாரைநகர். — வழக்காளி

1. சிவகுரு நவரத்தினமும் பெண்
2. தங்கரத்தினமும் — இருவரும்

பெரியவிளான், இளவாலை.
— பதிவிடப்பட்ட வழக்காளிகள்

எதிராக

நாகேசு சபாரத்தினம் — சந்தையடி,
சங்கானை — எதிராளி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் MB/2346 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1980-ம் ஆண்டு வைகாசி மாதம் 19-ந் திகதி (19-5-1980) திங்கட் கிழமை காலை 10-30 மணிக்கு இந்தக் காணிக்குள் நின்று ஏல விற்பனையை நடத்த நியமித்துள்ளேன்.

### தீர்வைத் தொகை

மேல்குறித்த எதிராளிகள் குறித்த 2-ம் பதிவிடப்பட்ட வழக்காளிக்கு ரூபா 2000/-வும், மேலும் 1000/-க்கு நூற்றுக்கு 12 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 11-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1979-ம் ஆண்டு வைகாசிமாதம் 18-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 524-15 கொடுக்க வேண்டியிருப்பதாலும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானைக் கோவிற்பற்று சங்கானை கிழக்கு இறை! குறிஞ்சியன்திடல் நிலப்பரப்பு 8 இதற்கு எல்லை கிழக்கு மதியாபரணம் பெண் சிவக்கொழுந்துவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், வடக்கு; சரவணமுத்து சிவபெருமானுக்குரிய ஆதனம். மேற்கு; தம்பிமுத்து சுப்பிரமணியத்திற்கும் பங்காளருக்கும் உரியஆதனம். தெற்கு! முருகேசு முத்தையாவுக்கும் கந்தையா பெண் அன்னமுத்துவுக்கும் முருகேசு சின்னத்தம்பிக்குமுரிய ஆதனங்கள் இதடங்கலும்.

சி. செ. பாலசிங்கம்,
கொமிஷனரும், மதிப்பாளரும்
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை. 16-04-1980
5547

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தனவந்தன், ஏழை என்பவன் யார்? செலவுக்கு மேல் கூடுதலாக வருவாயுள்ளவன் தனவந்தன். வரவுக்கு மேல் செலவழிப்பவன் ஏழை.

—புருயெர்

## மக்கள் கருத்து

### சாவகச்சேரியிலும் தரிப்பு வேண்டும்

காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்குப் புதிதாக அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட விசேஷ கடுகதி ரயில்சேவை பாராட்டுக்குரியதொன் செயலாகும். தபால் ரயிலில் ஏற்படக்கூடிய நெருக்கடியைத் தவிர்த்து பயணிகளின் நலன்களைக் கருத்திற்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இம் மாலை ரயில் சேவை வரவேற்கத்தக்கதே

ஆனால் இவ்விசேஷ ரயில் வடபகுதியின் பிரபல ரயில் நிலையங்களில் ஒன்றான சாவகச்சேரி ரயில் நிலையத்தில் தரித்துச் செல்வதில்லை யாழ். ரயில் நிலையத்தை அடுத்துக் கொடிகாமம் ரயில் நிலையத்திலேயே இது நிறுத்தப்படுகின்றது. உண்மையில் சன நெருக்கடியும் பிரயாணிகள் தொகையும் கொண்டதொரு நிலையம் சாவகச்சேரி. கைதடி, நாவற்குழி, சரசாலை, மட்டுவில், தனங்கிளப்பு, மறவன்புலவு போன்ற பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பயணிகள் தமது பயணத்தின் ஆரம்ப நிலையமாகச் சாவகச்சேரி ரயில் நிலையத்தையே பயன்படுத்துகிறார்கள். அவர்கள் யாழ். நிலையத்துக்கோ கொடிகாமத்துக்கோ போவது சிரமமான காரியம். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பயணிகளின் சௌகரியத்தையும் வசதியையும் முன்னிட்டு, மேற்படி விசேஷ கடுகதி ரயில் சேவையின் தரிப்பிடங்களில் ஒன்றாக சாவகச்சேரியையும் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகிறேன்.

த. நாகேஸ்வரன்
பெரியமாவடி,
சாவகச்சேரி.

## இவர்கள் கடத்தப்படுகிறார்களா?

(மாவிட்டபுரம்)

வீட்டில் பணியாளராகக் கடமையாற்றிய சிறுவன் ஒருவன் திடீரெனக் காணாமல் போய்விட்டதாக வீட்டுக்காரர் பொலிசில் புகார் செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த திரு. க. சிவரத்தினம் என்பவரது வீட்டில் வேலைக்கிருந்த மலைநாட்டைச் சேர்ந்த சுப்பிரமணியம் என்னும் சிறுவனே இவ்வாறு காணாமல் போயுள்ளான்.

இரவு படுக்கைக்குப் போன இச் சிறுவனை அதிகாலையில் பார்த்த போது அங்கு காணவில்லையென வீட்டுக்காரர் யாழ் பொலிசில் புகார் செய்துள்ளனர்.

இது மட்டுமன்றி யாழ் நகரில் வேறு பல வீடுகளில் பணியாளர்களாகக் கடமையாற்றிய சிறுவர்களும் திடீரெனக் காணாமல் போய்விட்டதாகப் பொலிசில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மேற்படி சிறுவர்களுக்கு ஆசைவார்த்தைகள் கூறி அவர்களை இவ்வீடுகளிலிருந்து அழைத்துச் செல்வதில் கோஷ்டியொன்று ஈடுபடுகிறதா எனச் சந்தேகிக்கப்படுகிறது.

பொலிசார் விசாரணை செய்துகின்றனர். [அ]

## மாணவர்கள் இணக்கம்

தெஹ்ரான், ஏப். 22

அமெரிக்க பயணக் கைதிகளை அவர்களது பெற்றோர் பார்வையிட அனுமதிப்பதென்று மாணவர்களும் ஈரான் அரசும் தீர்மானித்துள்ளனர் (இ)

## பிரியாவிடை

(அரியாலை)

யாழ்.பரி யோவான் கல்லூரியில் 20 வருடங்களுக்கு மேலாக பௌதிகவியல் ஆசிரியராகப் பணிபுரிந்த திரு ரி. தவராஜலிங்கம் நைஜீரியாவில் ஆசிரியர் சேவை வாய்ப்புப் பெற்றுச் செல்வதை முன்னிட்டு யாழ். பரி யோவான் கல்லூரி இன்ரக்கிளப்பினர் இரவு விருந்தளித்துக் கௌரவித்தனர்.

இன்ரக்கிளப் தலைவர் செல்வன் கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கல்லூரி அதிபர் திரு. வி.ஈ. ஆனந்தராசா ஆசிரியரின் சேவைநலம் குறித்துப் பேசினார். (அ)

## பரந்தன் ரசாயன தொழிற்சாலை:

# ஊழியர்களின் 'சிவப்பு' பட்டி போராட்டம்

## எம்பிலிப்பிட்டியா திட்டத்திற்கு தொழிற் சங்கங்கள் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக்குப் பாதகம் ஏற்படும் வகையில், அரசாங்கம் மேற்கொண்டுவரும் எம்பிலிபிட்டியத் திட்டத்தை கைவிட்டு பரந்தன் இரசாயன தொழிற்சாலையை அபிவிருத்தி செய்யுமாறு பரந்தன் இரசாயன தொழிற்சாலையிலுள்ள சகல தொழிற்சங்கங்களும் போராட்டம் நடத்தி வருகின்றன.

தொழிலாளர்கள் வேலை நேரத்தில் தேசியநலனுக்காக கிறமர் அன்ட் உவாணர் அறிக்கையின் உண்மையான சிபார்சுகளை நடைமுறைப்படுத்துமாறு கோரும் 'சிவப்பு'பட்டியொன்றை அணிந்த வண்ணம் வேலைசெய்துவருகின்றனர்.

தொழிற்சங்கங்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் உத்தேச எம்பிலிப்பிட்டியாத் திட்டத்தை மேற்கொள்வதற்காக பொதுமக்களின் பணத்தை துஷ்பிரயோகம் செய்வதுபற்றி பூரண விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் பரந்தன் தொழிற்சாலையின் நலனுக்கு குந்தகமான நடவடிக்கைக்கு பொறுப்பான சகலரையும் பதவிநீக்கம் செய்யவேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்க பொதுச்செயலாளர் அரசின் நடவடிக்கை குறித்து ஜனாதிபதி, கைத்தொழில் அமைச்சு பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத் தலைவர்களுக்குஅனுப்பியுள்ள கடிதத்தின் விபரம் வருமாறு:

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் எம்பிலிப்பிட்டியாவில் புதிய தொழிற்சாலை ஒன்றை நிறுவ மேற்கொள்ளவிருக்கும் திட்டத்தை கைவிடுமாறு வேண்டுகின்றோம்.

பிரபல்யம் வாய்ந்த கிறமர் அன்ட் உவாணர் என்ற பிரித்தானிய அறிவுரை நிறுவனத்தினர் முதன் முதலில் 1979 ஜூன் 14 ம் நாள் கூட்டுத்தாபனச் சபைக்கு வழங்கிய சிபார்சுகளை தங்கள் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் ஏ மத்தியூ நிராகரித்ததைத் தொடர்ந்து எம்பிலிபிட்டியா திட்டத்தை மேற்கொள்ளும் முடிவு எடுக்கப்பட்டதாக நாம் அறிகின்றோம். எம்பிலிபிட்டியாவில் அல்லது சபுஸ்கந்தயில் புதிய குளோரின் எரிசோடாத் தொழிற்சாலையை நிறுவுவதா அல்லது பரந்தனிலுள்ள தொழிற்சாலையை அபிவிருத்தி செய்வதா சிறந்தது என ஒப்பிட்டுப் பொருளியல்நயப் பொருத்தப்பாட்டு ஆய்வு மேற்கொண்டு அவற்றின் அடிப்படையிலேயே இச்சிபார்சுகள் வழங்கப்பட்டன. பரந்தனில் இன்றுள்ள தொழிற்சாலையை அபிவிருத்தி செய்வதே பொருளாதார அபிவிருத்திக்குரிய மிகச்சிறந்த தேர்வு என்பதே கிறமர் அன்ட் உவாணர் நிறுவனத்தினரின் முடிவாக அமைந்தது) அதன்படி பல பட்டங்களில்பரந்தன்தொழிற்சாலையை அபிவிருத்தி செய்ய வேண்டுமென அவர்கள் இறுதியாக சிபார்சு செய்தனர்.

எம்பிலிப்பிட்டியாத் திட்டத்தை அரசாங்கம் தொடர்ந்தும் மேற்கொள்வதுபரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபதின் ஊழியர்களின் நலனுக்குதீங்கு விளைவிப்பது மாத்திரமன்றி பொது நிதியை தகாதமுறையில் பயன்படுத்துவதொன்றாக நாங்கள் கருதுகின்றோம். அதே நேரத்தில் அமைச்சின் "கொள்கையில் உள்ள சந்தேகத்திற்கு உரிய நிலையும் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளும்க தொடர்பாக எம்மால் எழுப்பியுள்ள விடயங்கள் பற்றியும் அதன் பூரண விசாரணை ஒன்றை செய்வது பொது மக்களின் நலனுக்கே என்பது எமதுஉணர்வாகும்." (கெ)

# முதலாந்தர உயர்வு பெற்ற முதல்தமிழ்க் கல்வியதிபதி



வடமாநிலக் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் சென்ற 15ம் திகதியில் இருந்து முதலாந்தரக் கல்வி அதிபதியாகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். கல்விச் சேவை ஆணைக்குழுவினால் முதலாந்தரக் கல்வி அதிபதியாகத் தெரிவு செய்யப்பெற்ற முதலாவது தமிழ்க் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகரே என்பது குறிப்பிடத்தக்கது

சைவ தமிழ்ச் சேவைக்கே உடல், பொருள், ஆவியை அர்ப்பணித்த புத்தூர் மழவராயர்வழித் தோன்றலாகிய திரு. மாணிக்கவாசகர், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியிற் படித்து மற்றிக்குலேஷன் பரீட்சையில் 1939 ல் சித்தியடைந்து உயர் கல்வி பெறும் பொருட்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து இடைமானித் தேர்வில் (இன்ரர் ஆட்ஸ்) 1941 ல் சித்தியடைந்தார். பின்னர் சென்னைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து 1943 ல் பி. ஏ. பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவராய் அரும்பணியாற்றிய மாணிக்கவாசகர், சென்னைப் பல்கலைக்கழகத்துக்குச் சென்றார்.

சென்னைப் பட்டதாரியாய் வெளிவந்த திரு. மாணிக்கவாசகர் 1943 ல் இடைக்காடு மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் பணியை மேற்கொண்டார். வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் பணியாற்றிய இவர், 1950 நவம்பரில் வத்துகாமம் வித்தியாதிகாரியாய்ப் பதவியேற்று மேலும் நாவலப்பிட்டி, பெல்மதுளை, நீர்கொழும்பு ஆகிய இடங்களிற் சேவையாற்றிவிட்டு 1962 ல் மாற்றச்சபையின் கடமைகளை ஏற்கக் கொழும்பு சென்றார்.

1964ல் ஆங்கிலப் பகுதிக்குப் பொறுப்பாயிருந்து பிரயோகமான பல கருத்தரங்குகளை நடத்தியதுடன் தொடர்ந்து புத்தகம் எழுதும் சபையில் பணியாற்றினார். ஆங்கிலம், தமிழ், சமயம், குடியியல் முதலாம் பாடப் புத்தகங்கள் சிறப்பாக வெளிவர இவரது பங்கு குறிப்பிடத்தக்கது.

வித்தியா வெகுமதி பெற்று அவுஸ்திரேலியா சென்று டிப்புளோமாப் பரீட்சையில் உயர் சித்தி பெற்ற திரு. மாணிக்கவாசகர், மாறகமா ஆங்கிலப் பயிற்சிக் கலாசாலையில் ஏற்கனவே பயிற்சிபெற்றிருந்தார்

1969ல் ஆங்கிலக் கல்விக்கான கல்வி அதிகாரியாய்க் கடமையாற்றிய இவரது திறமையைக் கண்ட அரசு 1971ல் பிரதம கல்வி அதிகாரியாக்கியதுடன், ஆசிரிய சங்கங்கள், பொதுமக்களின் பலத்த வேண்டுகோளுக்கிணங்க தலைமைக் கல்விப் பணிமனையில் ஆரம்பித்து வைத்த தமிழ்ப் பிரிவுக்குப் பொறுப்பதிகாரியாய்க் கல்வி அமைச்சு நியமித்தது.

1972 டிசம்பரில் கல்வி அதிபதியாகப்பதவி உயர்வு பெற்ற திரு. மாணிக்கவாசகர், யாழ்ப்பாணம் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் வியத்தகு சேவை புரிந்தார். இடையிற் சில காலம் பரீட்சைப் பகுதியில் நல்ல சேவையாற்றும் சந்தர்ப்பமும் கிடைத்தது.

சிறிய பாடசாலை, பெரிய பாடசாலை என்ற பேதமின்றிச் சகல பாடசாலைகளுக்கும் விஜயம் செய்து முன்னேற்றகரமான பாதையில் நெறிப்படுத்தி வரும் கல்வி அதிபதி திரு. மாணிக்கவாசகர், ஆசிரியராயிருந்தபோது தொழிற்சங்க ஊழியராயிருந்து வடமாகாண ஆசிரியர் சங்க வளர்ச்சிக்கு உழைத்ததுடன், பின்னர் நாவலப்பிட்டி திருக்குறள் மகாநாடு, நாவலர் மகாநாடுகள், சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு விழாஎன்பன சிறப்புறநடைபெற அரும்பாடுபட்டார்.

கல்வி அதிபதிகள், கல்வி அதிகாரிகளை உள்ளடக்கிய கல்விப் பரிபாலன சேவைச் சங்கத்தின் தலைவராய் இருமுறை கடமையாற்றிய திரு. மாணிக்கவாசகர், புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியின் முகாமையாளராயும் நம்பிக்கைச் சொத்துப் பரிபாலன சபை உறுப்பினராகவும் இருந்து ஆற்றிய சேவைகள் அதிகம்.

அகில இலங்கை இந்துமாமன்றம், கொழும்பு விவேகானந்த சபை முதலிய ஸ்தாபனங்களில் உபதலைவராய்ச் சேவையாற்றிய திரு. மாணிக்கவாசகர், விவேகானந்த சபைப் பரீட்சை உபகுழுவின் தலைவராக இருந்து பணியாற்றிய காலம் பொன் எழுத்துக்களாற் பொறிக்கக்கூடியதாகும்.

உ-ம் தரக் கல்வி அதிபதியாய் இருந்து முதலாந்தரக் கல்வி அதிபதியாகப் பதவி உயர்வு பெற்ற திரு. மாணிக்கவாசகர் புத்தூரைச் சேர்ந்த தில்லைநாதன் தங்கம்மா தம்பதிகளின் புத்திரனுவர்.—சபா

# "ஆசிரியர் ஊழியர் சம்பளம் பணமாகவே வேண்டும்"

## இ. ஆ. ச. யாழ். கிளை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

"கடந்த காலங்களில் நடைபெற்றது போல், ஆசிரியர்கள், ஊழியர்கள், சம்பளத்தைப் பணமாகவே வழங்க வேண்டுமெனக் கோரும் தீர்மானம், இலங்கை ஆசிரியர் சங்க யாழ். மாவட்டக் கிளையால் நிறைவேற்றப்பட்டது.

யாழ். ஜும்மா மொஸ்லேனிலுள்ள மேற்படிச் சங்கப் பணிமனையில் சங்கத் தலைவர் எஸ். கே. சுந்தரலிங்கம் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் இலங்கை ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. எச் என். பெர்னாண்டோவும் கலந்து கொண்டார்.

இக் கூட்டத்தில் சங்கச் செயலாளர் திரு. ரி. தேவராசா பேசுகையில், 78ம் ஆண்டு டிசம்பர் மாதம் கல்வி அமைச்சில் தொழிற்சங்கங்களுக்கும் கல்வி அதிகாரிகளுக்குடையே நடைபெற்ற தீர்மானத்தின்படி இவ்வளவு காலமும் பணமாக வழங்கியது போல் தொடர்ந்தும், பணமாகவே வழங்கவேண்டும் என்று கூறினார். ஆசிரியர்களுக்குத் தனித்தனியே காசோலையாக வழங்குவதென்ற அதிபர்கள் சங்கத்தீர்மானத்தை, பல ஆசிரியர் சங்கங்களும் கண்டித்துள்ளன. (கொ)

## கல்வி அதிகாரிகள் குழு

(பச்சிலைப்பள்ளி)

பருத்தித்துறை பிரதேசத்தில் பெரும்பாலானவான பாடசாலைகளுக்கு விஜயம் செய்த கல்வி அதிகாரிகள் குழு அப்பாடசாலைகளில் காணப்படுகின்ற ஆசிரியர் பற்றாக்குறை, இடவசதியின்மை, தளபாடப் பற்றாக்குறைவு ஆகியனவற்றையும் ஆசிரியர்கள் எதிர்நோக்கின்ற போக்குவரத்துக் கஷ்டங்கள், விடுதிவசதியின்மை ஆகியனவற்றையும் நேரிற் கண்டறிந்தனர்.

இக் குழுவில் வடமாநிலக் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் அவர்களின் தலைமையின் கீழ் கல்வி அதிகாரி திரு அருளானந்தம், உடற்பயிற்சி கல்வி அதிகாரி திரு. தங்கராசா பருத்தித்துறை கல்வி அதிகாரி திரு. துரைசுவாமி ஆகியோர் இடம்பெற்றனர். இவ்வதிகாரிகள் குழுவினர் வெற்றிலைக்கேணி பரமேஸ்வர கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் மதிய போசனம் அளித்துக் கௌரவிக்கப்பட்டனர் (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.க.-ஜனதா கூட்டணியில் நெருக்கடி?

(சென்னை)

அ. தி. மு. க. ஜனதா கட்சிகளுக்கிடையேயான கூட்டணிக்குள்ளும் தொகுதிகள் பங்கீட்டில் சிக்கல்கள் இடம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு ஜனதா கட்சியின் மதிப்புக்கும் கௌரவத்திற்கும் பங்கம் ஏற்படாத வகையில் அ. இ. அ. தி. மு. க. வுடன் தொகுதி உடன்பாடு காண முடியாமல் போனால் மாநில சட்டப் பேரவைத் தேர்தலில் ஜனதா கட்சி தனித்துப் போட்டியிடுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்று முன்னாள் மத்திய அமைச்சர் திரு. பா. ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

அ. இ. அ. தி. மு. க. விட்டுக் கொடுப்பதாகச் சொல்லியுள்ள தொகுதிகளின் எண்ணிக்கை போதுமானதாகவோ, மன நிறைவு அளிக்கத் தக்கதாகவோ கட்சியின் கௌரவம் கண்ணியத்திற்கு உகந்ததாகவோ இல்லை என்று பெரும்பாலான உறுப்பினர்கள் அண்மையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் தெரிவித்தனர். கட்சியின் கௌரவ மதிப்புக்கு ஏற்ற எண்ணிக்கை உள்ள தொகுதிகளை ஜனதாவுக்குப் பெற்றுத்தர அ. இ. அ. தி. மு. க. வுடன் பேச்சுவார்த்தை நடத்த தலைவருக்கு அதிகாரமளிக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

குறைந்த பட்சம் 46 தொகுதிகளையாவது ஜனதாவுக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்பது நிர்வாகக் குழுவில் தெரிவிக்கப்பட்ட பரவலான கருத்து. 46 தொகுதி என்பதில் ஒரே பிடிவாதமாக இருக்க மாட்டோம். அதே நேரத்தில் கட்சியின் கண்ணியம் கௌரவத்திற்கு பங்கம் ஏற்படக் கூடிய வகையில் உடன்பாடு தொகுதி எண்ணிக்கை இருக்கலாகாது என்பது பெரும் பாலானவர்கள் தெரிவித்த கருத்தாகும்.

இதுகுறித்து அ. தி. மு. க. தலைவர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

அ. இ. அ. தி. மு. க. கட்சி மாநில ஜனதா கட்சிக்கு அதிக பட்சம் இருபது தொகுதிகளை விட்டுக் கொடுக்கும். எக்காரணத்தைக் கொண்டும் தற்போது பேச்சு வார்த்தை நடத்தி வரும். கட்சிகளுடன் கூடுமான வரையில் பேச்சு வார்த்தை முறிடக்கூடாது என்பதில் அ. இ. அ. தி. மு. க. அக்கறை கொண்டுள்ளது. அதே நேரத்தில் கூட்டணி கட்சிகளும் யதார்த்த நிலையை உணர்ந்து தங்களுடைய கோரிக்கையை வைப்பார்கள் என நம்புகிறோம்''

## கம்யூனிஸ்ட் கருத்து

இரு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் தலா 14 இடங்களையும் ஜனதா கட்சிக்கு அதிக பட்சம் இருபது தொகுதிகளையும் விட்டுக் கொடுக்க அ. இ. அ. தி. மு. க. தலைமை தயாராக உள்ளது. இது நியாயமான உடன்பாட்டுக்கு வழிவகுப்பதாகவே அமையும். ஜனதா கட்சியும் தனது பலம் செல்வாக்கு இதர வசதிகளை கருத்தில் கொண்டு பிடிவாத நிலைகாட்டாமல் இந்த உடன்பாட்டில் இடம் பெறும் என்று நம்புவதாக கம்யூனிஸ்ட் கட்சி முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனதா கட்சி 46 இடங்களைப் பெறவேண்டும். என்பதில் பிடிவாத நிலை இல்லை என்ற போதிலும் நியாயமான எண்ணிக்கை இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என விரும்புகிறது. தேர்தல் உடன்பாடு பேச்சு வார்த்தை முறியக் கூடாது என்ற அக்கறை எங்களுக்கும் உள்ளது என்ற போதிலும் அதற்காக கட்சியை விற்க முடியாது என்று நிருபர் கூட்டத்தில் பா. ராமச்சந்திரன் தெரிவித்தார்.

## நெடுஞ்செழியன் பேட்டி

கூட்டணிக் கட்சிகளுக்கிடையே நடைபெற்று வரும் தொகுதி உடன்பாடு பேச்சு வார்த்தை வெகு விரைவில் முடிவடையும். உடன்பாடு காண்பதில் சிக்கல் அல்லது முட்டுக்கட்டை எதுவுமிராது என்று நம்புவதாக அ. இ. அ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. ஆர். நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

## வெற்றியே முக்கியம்

போட்டியிடும் தொகுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பது அல்ல முக்கியம். வெற்றி பெறுவதே முக்கியம். என்ற அடிப்படையில் தோழமைக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. பல கட்சிகள் பல எண்ணிக்கையைக் கூறியிருக்கலாம் அல்லது கோரலாம் ஆனால் அவை அனைத்தும் பரஸ்பர பேச்சு வார்த்தை கருத்து பரிமாறிக் கொள்ளும் கட்டத்திலேயே உள்ளது'' என்றும் திரு. நெடுஞ்செழியன் விளக்கினார்.

---

# மேலைநாட்டார் எம்மைத் தேடிவரும் காலமிது!

## நூல் அரங்கேற்றத்தில் உரை

(வீழிசெட்டி)

''நாங்கள் மேல் நாட்டவரைத் தேடிச் சென்று அறிவு பெற வேண்டியகாலம் ஒன்றிருந்தது. பின்பு எங்கள் சமய உண்மைகளைத் தெளிந்து அவர்களைத் தேடிப்போய் எங்கள் உயர்வைப் பற்றி அறிவுறுத்த வேண்டிஇருந்தது. இன்றுஎமது ஆலயத்தின் தத்துவங்களைப் விளக்கிக் கொள்ள அவர்கள் எங்களைத் தேடி வருகிறார்கள். மேலை நாட்டிலிருந்து இங்கே வருகிறவர்களெல்லாம் ஹிப்பிகள் என்றும்உல்லாசப் பயணிகள் என்றும் நினைப்பதுதவறு. விரிவுரையாளர்களும்பேராசிரியர்களும் நிறைய வருகிறார்கள். அவர்கள் கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாத நிலையில் நாங்கள் இருக்கக் கூடாது எங்களது தல புராணங்களைப் பற்றி நாம் விரிவாக அறிந்திருக்கவேண்டும்.''

சென்ற வாரம் கீரிமலைச் சிவநெறிக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற நகுலகிரிப் புராணஉரை நூல்அரங்கேற்றத்தில் உரையாசிரியர் திரு)செ. சிவசுப்பிரமணியத்திற்கு பாராட்டுரை வழங்கிய பல்கலைப் புலவர்க.சி.குலரத்தினம் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் சிவஸ்ரீ.கு. நகுலேஸ்வரக் குருக்கள் உரையாசிரியரின் ஆலயப் பணியைப்பெரிதும் பாராட்டி ஆசியுரையும் வழங்கினார்.

சிவ நெறிப் புரவலர் திரு. க. கனகராசா உரையாசிரியருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்து சிறப்புப் பிரதி ஒன்றினையும் பெற்றுக் கொண்டார். திரு. க. [illegible]லசிங்கம் முதல் பிரதியைப் பெற்றார்.

---

### தந்தை செல்வா

# நினைவாலயத் திறப்புவிழா 3 நாள் நிகழ்ச்சிகள்



(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வா நினைவாலயத்தை இம்மாதம் 26-ந் திகதி பாலை) எதிர்க்கட்சித் தலைவரும்,] தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் திறந்துவைப்பார்.

தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுத் தலைவர் திரு. கு. நேசையா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் நல்லை ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள், அதிவந். வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை, அதிவந். டி. ஜே. அம்பலவாணர், ஆலி. ஜனாப் பாஷா மொகிதீன் பிச்சை, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள்.

தந்தை செல்வா நினைவாஞ்சலி மலர் ஒன்று இவ்விழாவில் வெளியிடப்படும்.

நினைவாலயத்தை அழகுற அமைத்த திரு. வி. எஸ். துரைராஜா. நினைவாலயத்தைக் கட்டியெழுப்பிய திரு. மனோகரன் திரு. வெற்றிவேலு, ஆகியோருக்கு யாழ். மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் பொன்னாடை போர்த்திச் சிறப்பிப்பார்

தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுச்செயலாளர் திரு. வி. தர்மலிங்கம் நன்றி தெரிவித்துப் பேசுவார்.

## நினைவுச் சொற்பொழிவு

தந்தை செல்வா நினைவு சொற்பொழிவுகள் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் 28ம் திகதிகளில் நடைபெறும்.

27ம் திகதி யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் அருட்திரு சேவியர் தனிநாயகம் அடிகள் தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும் என்ற தலைப்பில் தமிழில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

28ம் திகதி திரு. கு. நேசையா தலைமையில் அருட்திரு சேவியர் தனிநாயகம் அடிகள் தமிழ்த்துறை ஆராய்ச்சி அதன் வரலாறும் வருங்காலமும் என்றதலைப்பில் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றுவார்.

27ம் திகதி இரவு திறந்த வெளியரங்கில் சங்கிலியன் நாடகமும், 28ம் திகதி இரவு ''தந்தை செல்வா பிறந்தவேல்'' என்ற வில்லுப்பாட்டும் இடம்பெறவிருக்கின்றன.

(ச-)

---

# பரிசளிப்பும் கலைவிழாவும்

(சாவகச்சேரி)

இடைக்காடு சன சமூக நிலையத்தாரின் 3-வது மின்னொளியில் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் பரிசளிப்புவிழாவும் கலை நிகழ்ச்சிகளும் இம்மாதம் 28ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளன. பிரதம அதிதியாக திருக்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கமும் பாரியாரும் கலந்து கொள்வார்கள். சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் ஆகியோர் பங்குபற்றுவார்கள்.

இச் சுற்றுப்போட்டி இம்மாதம் 27ம் திகதி ஞாயிறு தினத்துடன் முடிவடைகின்றது.

இன்றைய ஆட்டங்களைத் தொடர்ந்து விசேட கலை நிகழ்ச்சிகளாக இடைக்காடு அன்பர்கள் குழு அளிக்கும் 'உண்மைகள் உறங்குவதில்லை' நகைச்சுவை நாடகமும் தென்புலோலி அற்புதாலயா [illegible] இடம்பெறவுள்ளன. [அ]

---

# தென்னங்கன்றுகள் விநியோகிக்க புதிய திட்டம்

(கொழும்பு)

நாடுமுழுவதும் தென்னைச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு தென்னங்கன்றுகளை பரந்த அளவில் விநியோகம் செய்ய தென்னை பயிரிடும் சபை முன்வந்துள்ளது.

தென்னங்கன்றுகளை பொது மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு தென்னை உற்பத்தி செய்யவிரும்புபவர்களிடமிருந்து சபை விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை பெறவிரும்புவோர் சபையின் தலைமைகாரியாலயத்திற்கோ அன்றி சபையின் பிராந்திய அலுவலகங்களுக்கோ 35 சதம் முத்திரையுடன் கூடிய சுயமுகவரியிடப்பட்ட காகித உறையை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம் என்று சபை அறிவித்துள்ளது.

இவ்வாண்டு அக்டோபர் நவம்பர் பருவகாலத்தில் நாட்டுவதற்கு ஏற்றவாறு தலா 2ரூபா விதம் இத்தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்படும் என்றும் சபை அறிவித்துள்ளது. (இ)

---

### நிறைகுறைந்த படிகள்

# திடீர் பரிசோதனையில் 10 பேர் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சின்னக்கடை சந்தையில், நேற்றுக்காலை, நிறுத்தல் அளவைப் பகுதியினர் நடத்திய திடீர் வேட்டையில் 10 வியாபாரிகள் நிறை குறைவான படிகளையும் முத்திரையிடாத தராசுகளையும் பாவித்தும், வியாபாரம் செய்து கொண்டிருக்கையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர்

இவர்களில் ஒருவர் வைத்திருந்த 4ருத்தல் படி 3½ருத்தல் நிறையைக் கட்டக் கூடியதாகவும்: இன்னொருவர் வைத்திருந்த 2ருத்தல் படி 02 அவுன்ஸ் நிறை குறைவாகவும் இருக்கக் காணப்பட்டது

இவர்கள் அனைவர் மீதும் விரைவில் நீதிமன்ற வழக்குத் தாக்கல் செய்ய நிறுத்தல் அளவைப்பகுதி நடவடிக்கை எடுத்துள்ளது.

பொதுச் சந்தைகளிலும் மீன் வியாபாரிகளிடமும் பாவிக்கப்படும் நிறைகள், படிகள் நிறைக்குறைவாக இருப்பதாக பொதுமக்கள் நிறுத்தல் அளவைப் பகுதி உயர் அதிகாரிகளுக்குச் செய்து கொண்ட புகாரின் பேரில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (செ)

---

# வருடாந்த உற்சவம்

[சித்தன்கேணி]

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் சந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் கடந்த திங்களன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

இம்மாதம் 28ம் திகதி திங்கட்கிழமை சப்பறத்திருவிழா, மறுநாள் ரதோற்சவம், அதற்கு அடுத்தநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

சப்பறத் திருவிழாவன்று இரவு தமிழ்நாடு மாயூரம் தருமை ஆதீனத் தமிழ்க்கல்லூரிப் பேராசிரியை வித்துவான் திருமதி ப. நீலா ''அழகனுக்கோர் அலங்காரம்'' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார்.

மே மாதம் 1ம் திகதி விக்னேஸ்வரர் பூசை, அநுஞ்ஞை, வாஸ்துசாந்தி, பிருத்சங்கிரகணம் சங்கஸ்தாபனமும் மறுநாள் பகல் சங்காபிஷேகமும் இரவு திருக்கல்யாணம் திருஊஞ்சல் தண்டிகை உற்சவமும் 3ம் திகதி வைரவபூசையும் நடைபெறும். (இ)

---

# முருங்கனில் மேதினம்

(மன்னார்)

முருங்கன் நீதிமன்ற மூன்றேற்றச் சமூகம் முருங்கன் கத்தோலிக்க மேதினக் குழு திருச்சபைகளின் உதவியுடன் மேதின விழாவும் ஊர்வலமும் நடத்த திட்டமிட்டுள்ளது.

ஏராளமான மாட்டுவண்டிகளும், டிராக்டர்களும், சைக்கிள்களும் பங்குபற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. [ச]

---

# சிரமதானமூலம் வீதி விஸ்தரிப்பு

(பண்டத்தரிப்பு)

தொட்டிலடி சனசமூக நிலையம் சங்கானை தொட்டிலடி மழுவை வீதியை சிரமதான மூலம் விஸ்தரித்துப் புனரமைக்கும் வேலைகளை ஆரம்பித்துள்ளது. வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு இச் சிரமதான வேலைகளை கடந்தவாரம் ஆரம்பித்து வைத்தார். (அ)

---

# தபால் பெட்டி இல்லை

(மன்னார்)

மடு றோட்டைச் சேர்ந்த செவிடன் குளம், ஆலங்குளம், கணேசபுரம், பத்து ஏக்கர் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் வெளியிடம் அனுப்பும் தபால் கடிதங்களைப் போட ஒரு தபால் பெட்டி இல்லாமல் மிகவும் கஷ்டமடைந்து வருகின்றனர். (க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காசோலை மூலம் ஆசிரியர் சம்பளம்: ஆசிரியசங்கம் கண்டனம்

## காசோலையை வாங்கவேண்டாம் என்றும் ஆசிரியர்களிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் உள்ள ஆசிரியர்களுக்கு அவர்களின் மாத வேதனத்தை தனித்தனிக் காசோலையாக வழங்கல் கல்வித் திணைக்களம் உத்தேசித்திருப்பதை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

எந்த ஓர் ஆசிரியரும் தனது மாத வேதனத்திற்காக காசோலையை ஏற்கக்கூடாது என மேற்படி சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திரு. மகாசிவம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

யாழ் மாவட்டத்தில் உள்ள 7000 ஆசிரியர்களுக்கும் காசோலைகள் வழங்குவதாயின் அவற்றை மாற்றிப் பணமாகப் பெறுவதில் பலத்த சிரமம் ஆசிரியர்களுக்கு ஏற்படும். சில இடங்களில் காசோலையை மாற்றுவதற்கு என பிரத்தியேகமாக பணம் செலவழிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அத்துடன் ஆசிரியர்களின் நேரம் சக்தி வீவு என்பனவும் வீண் விரயமாகும் எனவே இம்முறையை கல்வித்திணைக்களம் கைவிட வேண்டும். அத்துடன் எதிர்காலத்தில் ஆசிரியர்கள் சம்பளம் பெறுவதற்கான போக்குவரவுச் செலவையும் அதிபர்களுக்கு கொடுக்கக் கூடாதென சங்கம் ஆசிரியர்களுக்கு கோரிக்கை விடுக்கிறது.

இதே சமயத்தில் அதிபர்களையும் வங்கிகளுக்கோ தபால் நிலையங்களுக்கோ சென்று ஆசிரியர்களின் வேதனத்தைப் பெறுமாறு அதிபர்களைக் கல்வித்திணைக்களம் வற்புறுத்தக்கூடாது ஏனைய திணைக்களங்களில் உள்ள அரச ஊழியர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும் முறையைப் போன்று.

கல்வித் திணைக்களமே ஆசிரியர்களின் வேதனத்தைக் காசாக ஒவ்வொரு பாடசாலைக்கும் சென்று அதிபர்களிடம் கையளிக்கும் முறையின நடைமுறைப்படுத்தக் கூடிய ஒழுங்குகளைச் செய்து தரவேண்டும் என்றும் யாழ். கல்வித்திணைக்களத்தை பொதுச் செயலாளர் கோரியுள்ளார். (கொ)

# "பெரியமடு திட்டத்திற்கு மருத்துவமாது தேவை"

[மன்னார்]

மன்னார் பெரியமடு குடியேற்ற திட்டத்திற்கு ஒரு மருத்துவமாதை நியமிக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் மன்னார் அரசாங்க அதிபர் திரு. கபிலஸ் பெர்ணாண்டோவிடம் சமர்ப்பித்துள்ள மகஜரில் கோரியுள்ளார்கள்.

பெரியமடு குடியேற்றத்திட்டத்திற்கு விஜயம்செய்த அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது.

"மன்னார் பெரியமடு குடியேற்றத்திட்டத்தில் வாழும் கர்ப்பிணிப்பெண்கள் 8 மைல் தொலைவில் உள்ள விடத்தல் தீவு கிராம ஆஸ்பத்திரிக்கே செல்லவேண்டியுள்ளது.

பெரியமடு குடியேற்றத்திட்டத்திற்கு ஒரு மருத்துவ மாதை நியமிக்க வேண்டும். கடந்த 12 வருடங்களாக இப்பகுதியில் மருத்துவ மாது நியமிக்கப்படவில்லை மருத்துவமாது ஒருவரை நியமிக்கும் பட்சத்தில் இப்பகுதியில் உள்ள கர்ப்பிணி தாய்களின் கஷ்டங்கள் தீரும்."


## சிறந்த பஸ் நடத்துநர் - சாரதி தெரிவுப் போட்டி - 80

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை பஸ் நடத்துநரிடமும் ஒழுக்கம், அவதானம் திறமை ஆகிய நற்பண்புகளை பஸ் சாரதிகளிடமும் வளர்க்கும் வண்ணம் யாழ் றோட்டறிக் கழகம்

"சிறந்த நடாத்துநர், சிறந்த சாரதி"

போட்டியை

இலங்கை வடபிராந்திய போக்குவரத்துச்சபையுடனும் 'ஈழநாடு' பத்திரிகையுடனும் இணைந்து நடாத்த எண்ணியுள்ளது இம்முறை வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஏழு டிப்போக்களையும் உள்ளடக்கிப் போட்டி நடாத்தப்படுகிறது

இந்த டிப்போக்களிலிருந்து செயற்படும் பஸ் வண்டிகளில் கடமையாற்றும் சிறந்த சாரதிகளையும் நடாத்துநரையும் தெரிவு செய்ய உதவும் வண்ணம் "ஈழநாடு" பத்திரிகையில் இம்மாதம் 25 ம் திகதி முதல் பிரசுரிக்கப்படும் கூப்பன்களை நிரப்பி அனுப்பும்படி யாழ் றோட்டறிக்கழகம் பஸ் பிரயாணிகளை அன்புடன் கோருகிறது.

றோட்டேறியன் பல் வைத்தியகலாநிதி
பா. சே. பாரதி
தலைவர் - தொழிற்சேவை பகுதி
யாழ் றோட்டறிக் கழகம்.


# "குழந்தைக் கவிஞர்"



'குழந்தைக் குரல்' ஆசிரியர் தொண்டன் க. ச. கந்தசாமிக்குக் "குழந்தைக் கவிஞர்" என்ற பட்டம் வழங்கப்பட்டது

சங்கானையைச் சேர்ந்த இவரது 'குழந்தைக்குரல்' நூல் வெளியீட்டு விழா சங்கானை சிலம்புப்புளியடியில் நடைபெற்றபோது இப்பட்டம் வழங்கப்பட்டது எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் நூலையும் ஆசிரியரையும் பாராட்டிப் பேசினார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை இவரது கவிதைத் தொகுதிபற்றிக் குறிப்பிடும் பொழுது "குழந்தைக் குரல்" குழந்தைகளின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு இனிப்பது. சற்றே வளர்ச்சியடைந்தவர்களையும் வளர்ந்தவர்களையும் யாவரையுமே வசீகரிப்பது. கவிகள் வானொலியில் இசையோடு கூடி காற்றில் பரவ வேண்டும். கவிஞரின் சமூகத் தொண்டும் இலட்சிய சம்பத்தும் மிகவும் பாராட்டற்பாலன. கவிஞரின் கவிதை வற்றுமென் மேலும் பரவுவதாக. "குழந்தைக் கவிஞர்" என்ற பட்டத்தைச் சூட்டி மகிழ்வோமாக என்று கூறியிருக்கின்றார் (வ)

# மன்னாரில் டீசலுக்குப் பெரும் தட்டுப்பாடு

(மன்னார்)

மன்னாரில் டீசலுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது மன்னாரில் உள்ள எரிபொருள் விற்பனைநிலையங்களில் டீசல் இல்லை என்று கைவிரித்துவிடுகிறார்கள்.

இதனால் மீன்பிடித் தொழிலாளர்களும் வாகனச் சொந்தக்காரர்களும் தமது தொழிலைச் செய்யமுடியாது திண்டாடுகின்றனர். மன்னாரில் அடிக்கடி டீசலுக்கு தட்டுப்பாடு வருவது வழக்கமாகிவிட்டது.

மன்னார் ப. நோ. கூ. சங்கத்தின் சிறுத்தோப்பு எரிபொருள் விற்பனைநிலையத்தில் போதியளவு டீசல் கையிருப்பில் உண்டு. டீசல் பம் பழுதானதால் அதனை விற்பனை செய்ய முடியவில்லை. பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தில் இருந்துவந்தவர்கள் முறையாக இப்பம்பை திருத்தாததால் டீசல் விற்பனைசெய்ய முடியவில்லை என்று சிறுத்தோப்பு எரிபொருள் விற்பனை முகாமையாளர் தெரிவித்தார். (க)

# கடிகாரங்கள் கடத்தல் முயற்சி முறியடிப்பு

## பிரிட்டிஷ் காரருக்கு அபராதம்

(மன்னார்)

இடுப்புப் பட்டியின் மர்ம அறையில் வைத்து கடத்திச் செல்ல விருந்த கைக்கடிகாரங்களையும் டாலர் நோட்டுக்களையும் தலைமன்னார் சுங்க அதிகாரிகள் கண்டு பிடித்தனர்.

தலைமன்னார் பியரில் இருந்து இந்தியாவுக்கு கப்பல் மார்க்கமாக 1800 ரூபா பெறுமதியான 6 கைக்கடிகாரங்களையும் இலங்கை நாணயப்படி 30 ஆயிரம் ரூபா டாலர் நோட்டுக்களையும் பிரிட்டிஷ்காரர் ஒருவர் கடத்திச் செல்ல முயன்றார்.

இவர் இப்பொருட்களை தனது இடுப்பில் உள்ள பட்டியில் உள்ள மர்ம அறையில் வைத்து கடத்திச் செல்ல முயற்சித்தார் இவரின் நடத்தையில் சந்தேகம் கொண்ட உதவி சுங்க அதிகாரிகள் திரு. திரு. நிகால் குணவர்த்தனா திரு. யசந்தாளரியா வ, திரு. சி. விக்கிரமநாயக்கா, திரு. பீ எம். ஆனந்த் ஜனூப் எம். எம். மொகமட் ஆகியோர் சந்தேக நபரான பிரிட்டிஷ் காரரைச் சோதனையிட்டு கடத்தல் பொருட்களைக் கண்டு பிடித்தனர்.

இதுசம்பந்தமாக விசாரணை நடத்திய உதவி சுங்க கலெக்டர் திரு சேவியர் கைக்கடிகாரங்களையும் டாலர் நோட்டுக்களையும் பறிமுதல் செய்து பிரிட்டிஷ் காரருக்கு 2 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

# "உலகயுத்த அபாயம் மக்களை அச்சுறுத்துகிறது"

(யாழ்ப்பாணம்)

"உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நிலவும் ஜனவிரோத ஆட்சி, உலக யுத்த அபாயம் என்ற இரு பேராபத்துக்களுக்கும் எதிராக முழு நாட்டுமக்களையும் ஒன்றுபடுத்த அவர்களைச் சரியான வழியில் நடத்திச் செல்லத் தொழிலாளி வர்க்கமும், அனைத்துப் புரட்சிகர இயக்கங்களும் மேதினத்தில் உறுதிபூணவேண்டும்."

இலங்கைக் கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்ட் - லெனினிஸ்ட்) கட்சியின் வட பிரதேசக் கமிட்டி விடுத்துள்ள மேதினச் செய்தியில் தெரிவித்துள்ளது

மேற்படி கட்சியின் ஜனவிரோத ஆட்சியை எதிர்த்து மக்கள் மேதின விழாவை மே மாதம் 1ம் திகதி யாழ் நகர மண்டபத்தில் கொண்டாடவுள்ளனர்.

மார்க்ஸிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சியினர் மேலும் தமது செய்தியில் தெரிவித்துள்ளதாவது:

மூன்றாவது உலக யுத்த அபாயம் என்றுமில்லாதவாறு உலக மக்களை அச்சுறுத்திவருகிறது இந்துசமுத்திரப் பிரதேசம் சமாதானப் பிரதேசமாக இருக்கவேண்டுமென்ற எமது நாட்டினதும், உலக நாடுகளினதும், மக்களினதும் விருப்பு முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுவருகிறது இது எமது நாட்டுக்கும், மக்களுக்கும் முன்னுள்ள பேரபாயமாகும்

சோவியத்யூனியனின் திட்டமிட்ட ஆக்கிரமிப்பு விஸ்தரிப்புப் பேராசைக்கு ஆப்கானிஸ்தான்-கம்போடிய மக்கள் இரையாகியிருப்பதும், ஈரான் சம்பவங்களும் இரு பெரும் வல்லரசுகளான அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகியவற்றின் உலக ஆதிக்கப் போட்டி, ஒரு நெருக்கடியான கட்டத்துள் பிரவேசித்துவிட்டதையே எடுத்துக்காட்டுகிறது

உலக வல்லரசுகளின் செடிப்பிடி இறுக்க, இலங்கையில் ஐக்கிய தேசியக்கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியதும், இதுவரை தொழி

(8-ம் பக்கம் பார்க்க)


சில நிமிட நேரத்துக்குள்ளாகவே பூச்சி, புழுக்களைக்கட்டுப்படுத்தும் அற்புத சக்திவாய்ந்த சர்வபூச்சிநாசினி

# பரத்தியன் 63

மிளகாய், வெங்காயம், நெல், காய்கறி, மற்றும் எல்லாப் பயிர்களையும் பாதிக்கும் சகல பூச்சி புழுக்களையும் உடனே கட்டுப்படுத்தி நீடியகாலம் தங்கும்தன்மையுடைய 'பரத்தியன்' 6/3

★ மிகவும் சிக்கனமானது ★ சக்தி வாய்ந்தது

கிடைக்குமிடம்:
அக்ரேஸ் லிமிட்டெட்
59, கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்கள்:
ஜெசெம்
39, பிறிஸ்டல் பில்டிங், 51, யோர்க் வீதி, கொழும்பு 1 தொலைபேசி: 24353




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானுக்கு எண்ணெய் ஏற்றுமதியை ஈரான் நிறுத்தியது!

## பற்றாக்குறையைத் தீர்க்க அமெரிக்கா எண்ணெய் வழங்குமாம்

தெஹ்ரான் ஏப்.22

**ஜப்பானுக்கான எண்ணெய் ஏற்றுமதியை ஈரான் முற்றாக நிறுத்திக் கொண்டது.**

**மசகு எண்ணெய்க்கு ஈரான் கோரியுள்ள கூடுதல் விலையை ஜப்பான் வழங்க மறுத்ததை அடுத்தே ஈரான் ஜப்பானுக்கு எண்ணெய் விற்பனை செய்வதை நிறுத்தியுள்ளது.**

இம்மாதம் முதல் ஒரு பீப்பா எண்ணெய்க்கு 2.50 டாலர் வீதம் விலை அதிகரிப்பை ஈரான் அறிவித்திருந்தது.

இவ்விலை உயர்வை ஜப்பானிய அரசின் ஆதரவுடன் அங்குள்ள எண்ணெய்க் கம்பனிகள் நிராகரித்திருந்தன.

உலகின் மிகப் பெரும் கைத்தொழில் நாடான ஜப்பானுக்கு எண்ணெய் ஏற்றுமதி நிறுத்தப்பட்டதால் ஜப்பானுக்கு ஏற்படவிருக்கும் இழப்பைச் சமாளிக்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

ஜப்பானின் நிலையை அனுதாபத்துடன் பரிசீலனை செய்து அதற்கு எண்ணெய் வழங்க அமெரிக்கா தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஈரானிடமிருந்து ஜப்பான் நாளாந்தம் 5 லட்சத்து 20 ஆயிரம் பீப்பா மசகு எண்ணெயைக் கொள்வனவு செய்து வருவதும், இது ஜப்பானின் எண்ணெய் இறக்குமதியில் 10 வீதம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜப்பானிடம் 3 மாதங்களுக்குப் போதுமான எண்ணெய் தற்போது கையிருப்பில் இருக்கிறதென்றும் உடனடி எண்ணெய் நெருக்கடி அங்கு ஏற்பட இடமில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

ஈரானுக்கு எதிராக

# பிரிட்டனும் பொருளாதார தடைகளை அறிவித்தது

## 2 கட்டமாக அமுலுக்கு வருமாம்

லண்டன், ஏப்ரல் 22 ஈரான்—அமெரிக்க நெருக்கடி அதிகரித்து வருவதை அடுத்து பிரிட்டனும் ஈரானுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை அறிவித்துள்ளது.

இத்தடை எப்போது அமுலுக்கு வரும் என அறிவிக்கப்படவில்லை.

பிரிட்டன் அறிவித்துள்ள தடைவிபரம் வருமாறு:

மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம்செய்யும் ஈரானியர்களுக்கு 'விசேட விசா வழங்கப்படுவது அல்லது விசா வழங்குவதை நிறுத்துதல்-

ஈரானுக்கு ஆயுத விற்பனை செய்வதைத் தடைசெய்தல்-

ஈரானிடமிருந்து எண்ணெய் கொள்வனவு செய்வதை நாளடைவில் நிறுத்துதல்.

மூன்றாம் கட்டமாக மேற்கண்ட தடைகளை விதிப்பதென்றும்-

உணவு மருந்து ஆகியவற்றுக்கு இரண்டாவது கட்டமாகத் தடைவிதிப்பதென்றும் பிரிட்டன் அறிவித்துள்ளது. (இ)

ஸிம்பாப்வேயில்

# இந்திராவுடன் நடத்திய பேச்சுக்கள் பயனுள்ளவை

## மீண்டும் சந்திக்கவும் பாக். அதிபர் விருப்பம்

ராவல்பிண்டி, ஏப். 22

இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தியுடன் சாலிஸ்பரியில் நடத்திய பேச்சுவார்த்தை பெரிதும் பயனுள்ளதாக இருந்தது. இப் பேச்சுவார்த்தை நல்ல தொரு முடிவை ஏற்படுத்தும்.

இவ்வாறு பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக் தெரிவித்துள்ளார்.

ஸிம்பாப்வே சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டுவிட்டு நாடு திரும்பிய ஜெனரல் ஹக், ராவல்பிண்டியில் பத்திரிகைநிருபர்கள் மத்தியில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

இருதரப்பு பொதுவிஷயங்கள் பற்றியும் பிராந்திய நிலைமை குறித்தும் திருமதி காந்தியுடன் பேச்சு நடத்தினேன்.

மீண்டும் தற்போதைக்குத் திருமதி காந்தியைச் சந்திக்கும் திட்டம் எதுவும் இல்லை. ஆனால் எதிர்காலத்தில் அவரைச் சந்திக்கும் வாய்ப்புக்கள் எந்தநேரத்திலும் ஏற்படலாம். அதை மனப்பூர்வமாக விரும்புகிறேன். (இ)

அஸாம் நெருக்கடி

# மத்திய அரசும் மாணவரும் பேச்சு நடத்த வேண்டும்

## கட்சிப்பிரதிநிதிகள் கோரிக்கை

கௌஹாத்தி, ஏப். 22

அஸாம் நெருக்கடிக்குக் காரணமாக உள்ள வெளிநாட்டினர் குறித்து உடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து பிரச்னையை முடிவுக்கு கொண்டு வருக.

இவ்வாறு அஸாமிலுள்ள ஆறு அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் மத்திய அரசுக்கும் கிளர்ச்சி மாணவத் தலைவர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இரு பகுதியினருக்கு மிடையில் பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய சூழ்நிலையைத் தாங்கள் ஏற்படுத்திக்கொடுக்க தயாராக உள்ளதாகவும் அக்கட்சிப்பிரதிநிதிகள் தமது வேண்டுகோளில் தெரிவித்துள்ளனர்.

### அமைதி

இதேவேளை அஸாம்மாநிலத்தின் தலைநகருக்கு அருகே நேற்று ஊரடங்குச்சட்டம் அமுல்செய்யப்பட்ட மாவட்டத்தில் அமைதி நிலவுவதாகவும் இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைத் தொழிலாளர்கள் மாணவர்களின் வேண்டுகோளின் பேரில் தொடர்ந்து வேலைக்குப் போகவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

# இ. காங்கிரஸ் வேட்பாளர் பட்டியல்

சென்னை, ஏப். 22

தமிழ்நாடு மாநிலத் தேர்தலில் இந்திராகாங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியல் நாளை புதன்கிழமை அல்லது மறுநாள் இறுதியாக்கப்பட்டு வெளியிடப்படும் என்று தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ் தலைவர் திரு எம். பி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

தமிழகத்தில் கூட்டணிக் கட்சிகளான இந்திராகாங்கிரஸ் தி. மு. க. ஆகிய இரண்டும் தலா 109 தொகுதிகளிலும் மிகுதி 16 தொகுதிகளிலும் [illegible] தோழமைக் கட்சிகளும் போட்டியிட முடிவுசெய்துள்ளன. [இ]

# புற்று நோய்க்கு வழிவகுக்கும் புகையிலை, வெற்றிலை, சுருட்டு பாவித்தலை தடுக்கவேண்டும்

## இந்திய கல்வி அமைச்சர் கூறுகிறார்

புதுடில்லி, ஏப்ரல் 22

புற்றுநோய்க்கு வழிவகுக்கக் கூடிய புகையிலை, வெற்றிலை போடுதல், பீடி, சுருட்டு, சிகரெட் புகைத்தல் ஆகிய பழக்கங்களை பொதுமக்களுக்கு உடல்நலக் கல்வி போதிப்பதன் மூலம் கட்டுப்படுத்தமுடியும்.

இதைக் கருத்தில்கொண்டு நாடு முழுவதும் உடல்நலக் கல்வி போதிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு இந்திய கல்வி அமைச்சர் திரு. பி. சங்கரானந்த் தெரிவித்தார். (இ)

# முதல்வர் பதவி: கருணாநிதி கருத்து

சென்னை, ஏப் 22

தமிழகத்தின் அடுத்த முதல் அமைச்சர் யார் என்பதைவிட யார் முதல் அமைச்சராக வரக்கூடாது என்பது தான் முக்கிய பிரச்னை.

இவ்வாறு தி மு. க. தலைவர் திரு மு. கருணாநிதி கூறினார்.

பதவி என்பது பணியாற்றுவதற்கான ஒரு வாய்ப்பு என்றே தாம் கருதுவதாகவும் யார் முதல் அமைச்சர் என்பதைவிட, யார் முதலமைச்சராக வரக்கூடாது என்பது தான் இப்போதுள்ள முக்கிய பிரச்னை என்றும் திரு. கருணாநிதி கூறினார்.

திருவல்லிக்கேணியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய திரு கருணாநிதி மேலும் கூறியதாவது:

### தமிழக-டில்லி உறவு

தி. மு. க. இந்திரா காங்கிரஸ் உடன்பாடு என்பது இரண்டு அரசியல் கட்சிகள் உடன்பாடு அல்ல தமிழ்நாட்டிற்கும் டில்லிக்கும் ஏற்பட்டிருக்கின்ற உறவு' தமிழ் சமுதாயத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்று நல்லவாழ்வு அளித்து வளப்பத்திற்குக் கொண்டு செல்கின்ற உறவுதான் இந்த கூடன்பாடு''

இந்திரா காங்கிரஸுடன் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் உடன்பாடு கொண்டிருப்பதால், இருமொழிக் கொள்கை நிலைக்குமா என்று அ.தி மு.க.வினர் கேட்கின்றனர்.

அ. தி மு க இருமொழிக் கொள்கையைக் கைவிட்டு இந்திரா காங்கிரஸுடன் முன்பு தேர்தல் உடன்பாடு கொண்டிருந்ததா? ஜனதா கட்சியும் மும்மொழி கொள்கையை ஏற்றுக் கொண்ட கட்சி. அந்தக் கட்சியுடன் உடன்பாடு கண்டபோது, அ. தி.மு.க கட்சி இருமொழிக் கொள்கையை விட்டு விட்டு மும் மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டுதான் உடன்பாடு கொண்டதா?

1967-ம் ஆண்டில் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது, தமிழ் நாட்டில் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில்தான் பள்ளிகளில் போதிக்கப்பட வேண்டும். ஹிந்திக்கு இங்கு இடமில்லை என்று கூறும் இரு

(7ம் பக்கம் பார்க்க)


மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF

குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய 80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு "மேற்கு ஜெர்மனி 'BASF'" தயாரிப்பாகும்.

குமுலுஸ் எஸ

500 கிராம் ரூபா 11/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்



M LIMITED மக்வூட்ஸ் ஸ்தாபனம்

297, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

தொலைபேசி: 32941-5

METROPOLITAN


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெஸ்லி** மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-லதா
ஊருக்கு
உழைப்பவன்
(புதிய பிரதி

**ராகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி - சுஜாதா
தீபம்
(கலர் - புதியபிரதி)

**ராஜா** - (யாழ்நகர்) (சில தினங்கள் மட்டும்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-கவிதா-சந்திரமோகன்
நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்

**மனோஹரா** A
தினசரி 4 காட்சிகள்
மாலினி பொன்சேகா
மூவன் பலஸ
MUWAN PALASSA
[புதிய வெளியீடு - சிங்களம்]

**REGAL**
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p. m. only
GEORGE SEGAL, — GOLDIE HAWN
in
"THE DUCHESS AND THE DIRT WATER FOX"
(Color)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30 6-30, 9-30
சிவாஜி-சரோஜாதேவி- எம். ஆர். ராதா நடித்த
பாகப் பிரிவினை

**லிடோ** தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்) போன்: 7698
ஜெயசங்கர்-லட்சுமி
ஜீவனாம்சம்

**ராணி** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த், மலேசியா சிவாஜி ராஜா, மனகுமார்
நடித்த
நெஞ்சுக்கு நீதி
இது ஒரு இலங்கை - இந்திய - மலேசிய கூட்டுத் தயாரிப்பு

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30, 4-30, 7-15 10-30
சுதாகர் ராதிகா-விஜயன்-ரதி
மற்றும் பலர் நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-அசோகன்-நாகேஷ்-ராதிகா-ஜெயசித்திரா
தர்மலிங்கம்-டிங்கிரி கனகரத்தினம்-V. R. நடராஜா
ரத்தத்தின் ரத்தமே
(வண்ணக்கலர்)
டைரக்ஷன்: ஜோ தேவ் ஆனந்த்

**SANTHI** JAFFNA Phone 7642
Daily 10-30, 2-15, 4-30; 7-15 & 9-45 p.m.
"THE STING"
—COLOR—ACTION PACKED MOVIE—
From 25th "SCARAMOUCHE" color
Romantic...thrill...Suspense & Comedy

# மரங்களை பேணவிடில்விறகு இறக்குமதி செய்ய நேரிடும்

## பருத்தித்துறை எம். பி. எச்சரிக்கை

(பச்சிலைப்பள்ளி)

மரங்கள் பேணப்படாவிடில் பத்து வருடங்களுக்குப் பின்பு விறகு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும். இதனால்தான் மரம்நாட்டும்இயக்கத்தில் நாம் அக்கறை செலுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம் அதிலும் எனது தொகுதியிலுள்ள வடமராட்சி கிழக்குப் பகுதியில் மரங்கள் நடவேண்டிய அவசியத்தினை யாழ்ப்பாணத்திற்கு வந்திருக்கும் அமெரிக்க நிபுணர் குழு எடுத்துரைத்திருக்கிறது.

மரம் நடுகை இயக்கம் சம்பந்தமாக செம்பியன்பற்று கிராமாட்சி மன்றப் பணிமனையில் நடைபெற்ற கருத்தரங்கிற்குப் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் தலைமை வகித்துப் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: மரம்நடும் இயக்கத்திற்காக யாழ்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒன்றரை லட்சம் ரூபாவில் ஒரு லட்சம் ரூபாவை என்று தொகுதிக்குள்ளேயே செலவழிப்பதற்கு முயல்கிறேன். மக்களை நேரடியில் மரம் நடும் இயக்கத்தில் பங்குபற்றச் செய்வதற்காக வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் சமூகக் காடுகளை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறேன்.

எதிர் வரும் மரம் நாட்டும் இயக்க காலத்தின் போது பொதுமக்களுக்கு இப்பில் இப்பில், மகோகனி சமண்டலை, மாமரம், மரமுந்திரிகை ஆகிய மரங்கள் விநியோகிக்கப்படும். எனது தொகுதியில் உள்ள குளக்கரைகளில் மருத மரங்கள் நடப்படும். இன்று மாமரத்தின் பயன்பாடு அதிகரித்துள்ளது.

இக்கருத்தரங்கிற்கு தென்னை அபிவிருத்திச்சபை அதிகாரி டாக்டர் மோகனதாஸ், பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிட்னர், கிராமஅபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சி. குமாரசாமி மற்றும் கிராம அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகளும் சமூகமளித்திருந்தனர்.

## இன்றைய பலன்

சித்திரை மாதம் 11-ந்திகதி

(23-4-80) புதன்கிழமை

மேடம்: தொழில்துறையில் புதிய வெற்றிகளுக்கு வாய்ப்புண்டு. வெளியிடத் தொடர்புகள் மூலம் ஆதரவு அதிகரிக்கும். வணிகர்களாயின் வர்த்தகம் சம்பந்தமாக வெளிநாடு செல்லும் சந்தர்ப்பமும்கிடைக்கும்.

இடபம்: பண விடயத்தில் நல்ல மாறுதல்கள் ஏற்படும். எதிர்பாராத இடத்திலிருந்து அதிர்ஷ்டலாபமும் கிடைக்கலாம்; கல்வித்துறையில் பிள்ளைகளின் திறமை சுடர்பரப்பும். நீண்டநாள் நண்பர் ஒருவர் உதவிக்கு வருவார்.

மிதுனம்; துன்பத்தின் ரேகைகள் படரும். எதிலும் தயக்கம் ஏற்படும். ஆதரவு கொடுத்தவரே முதலில் கையை விரிக்கக்கூடும். கடன் தொல்லை அதிகரிக்கலாம். நிதானம் வேண்டும்.

கடகம்: பேச்சுவார்த்தைகளில் உணர்ச்சிவசப்படாதிருப்பது விரும்பத்தக்கது. அவசர முடிவின் மூலம் விரோதத்தைத் தேடிக்கொள்ளுவீர்கள். துதி பாடிக்கொண்டே சிலர் துரோகச் செயலில் ஈடுபடுவார்கள்.

சிங்கம்: தாம்பத்திய வாழ்வில் அன்பு தவழும். வாழ்க்கையில் தரமும் உயரும். காதலர்கள் வாழ்வில் கற்கண்டான நாள்.

கன்னி: குடும்பத்தில் குறை கேட்க நேரிடும். மறைமுகமாக நடத்திய காரியமொன்று இன்று அம்பலமாகலாம். சிலருக்கு விரக்தி மனப்பான்மை தென்படும். பொறுமையுடன் நடப்பது நன்று.

துலாம்: மாதரு வழிப் பெருமைக்கு இடமுண்டு. மனம்போல் யாவும் நடக்கும் இன்று கல்வியில் சிறப்பும், உறவினர் கொண்டாட்டமும் கிடைக்கும்

விருட்சம்: நேர்முகப் பரீட்சைக்கு உகந்த தினம். தெய்வத்தின் அருள் தாராளமாகக் கிடைக்கும்.

தனு: தவறுகள் நடக்கலாம். நிலையும் தடுமாறும். நண்பர்களே காலை வாரிவிடக்கூடும் சிலருக்கு அந்நிய வாசமும் ஏற்படலாம்

மகரம்: நலன்தரும் நிகழ்ச்சிகள் நடைபெறும். குடும்பத்தில் மிக்க மகிழ்ச்சியுண்டு நேர்மை வழி நிற்பீர்கள். பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும்.

கும்பம்: பணத்துடன் பழகுபவர்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் திருடர் பயத்துக்கு இடமுண்டு இனிக்கப் பேசுபவர்களை நம்ப வேண்டாம். கடமையில் அதிக கவலம் செலுத்தவும். துயர் படிந்த நாள்.

மீனம்: புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும். எடுத்த கருமத்தை முடிப்பதில் வெற்றியடைவீர்கள். பெரியோர் ஆசியும் அவசியம் கிடைக்கும்.

சோதிடக் கலாநிதி

நிருமலை

க. வேலுப்பிள்ளை

## டைனமைட் மீன்வழக்கில் எதிரிக்குரூ.2500 அபராதம்!

(யாழ்ப்பாணம்)

டைனமைற் வைத்துபிடித்த மீன் வைத்திருந்ததாக குற்றம் சாட்டி தொடரப் பட்ட வழக்கில் ஒரு வருக்கு 2ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவ் வழக்கு யாழ்.நீதிமன்றத்தில் நீதிபதி திரு.ரீ.யோகராதன் முன்னிலையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மீன் பிடி இலாகாவைச் சேர்ந்த அதிகாரி திரு.இராமநாதனுக்குக் கிடைத்த இரகசியத்தகவலைத் தொடர்ந்து நாவாந்துறைக்குச் சென்ற மேற்படி அதிகாரி அங்கு டைனமைற் வெடிவைத்துப் பிடித்த மீனை வைத்திருந்த அல்பிறற் அல்லது விஜயன் என்பவரை கைது செய்து அவருக்கு எதிராக யாழ்.நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

மேற்படி வழக்கில் எதிர் குற்றவாளியாக காணப்பட்டு இரண்டாயிரத்து ஐந்நூறுரூபா அபராதம் விதிக்கப்பட்டது

மீன் பிடி இலாகா தரப்பில் திரு.சிவராசபிள்ளை வழக்கை நடத்தினர். (கொ)

## முதல்வர்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மொழிக் கொள்கை சட்டப் பேரவையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. அப்போது பிரதமராக இருந்த திருமதி இந்திராகாந்தி அந்த தீர்மானத்தை மாற்றுங்கள் என்று சொல்லவில்லை. அப்போதே இருமொழித் திட்டத்தை தடுக்காக திருமதி இந்திரா காந்தி. அப்போது அதை அகற்றிவிட்டு மும்மொழித் திட்டத்தை வற்புறுத்த மாட்டார். இப்படி அவர் அந்தக் கொள்கையை வற்புறுத்தினால் நாங்கள் பதவியிலிருக்க மாட்டோம்'' (இ)

## கிரிக்கட் சுற்றுப்போட்டி முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். செயலக நலன்புரிச் சங்க 25 ஓவர் மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டியில் கடந்த வார இறுதியில் நடைபெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:

யாழ். செயலக கிரிக்கட் கோஷ்டிக்கும் மதிப்பீட்டுத் திணைக்களக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் செயலகக் கோஷ்டி 7விக்கட்டுகளால் வெற்றியீட்டியது.

கூட்டுறவுத் திணைக்களத்திற்கும் கலால் திணைக்களத்திற்குமிடையே நடைபெற்ற போட்டியில் கூட்டுறவு இலாகா 8 விக்கட்டுகளால் வெற்றிபெற்றது!

நீர்ப்பாசன இலாகாவுக்கும் யாழ். மாநகரசபைக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் நீர்ப்பாசன இலாகா 23 ஓட்டங்களால் வெற்றி பெற்றது!

வடபிராந்திய போக்குவரத்துச்சபைக்கும் சீமெந்து தொழிற்சாலைக்குமிடையே நடைபெற்ற போட்டியில் சீமெந்து தொழிற்சாலை 61 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இறைவரித் திணைக்களத்திற்கும் கல்வித் திணைக்களத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் கல்வித் திணைக்களம் 109 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. [இ]

## இன்றுவிசாரணை

(அரியாலை)

அரியாலை மேற்கு காந்திசன சமூக நிலையத்தின் பொது அங்கத்தவர்கள் தெரிவித்த நிர்வாகச் சீர்கேடுநிதிமோசடி சம்பந்தமான விசாரணைஇன்று புதன்கிழமை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் உதவி ஆணையாளர் திரு.அன்ரன் அல்பிரட் தலைமையில்நடைபெறவிருக்கிறது. விசாரணைக்குச் சமூகமளிக்குமாறு இருதரப்பினரும் அழைக்கப்பட்டுள்ளனர். (அ)

ஹரன் சாவகச்சேரி
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்
(இரு வேடம்)
புதிய பிரதி (கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷார்ப் போட்டோ
கொப்பியிங் சேர்விஸ்
(COPYING SERVICE)

சகல விதமான, அச்சு மற்றும் கையெழுத்துப் பத்திரங்களை குறைந்த செலவில், குறுகிய நேரத்தில் இறக்குமதிசெய்யப்பட்ட காகிதத்தில் போட்டோ பிரதி செய்து கொடுக்கப்படும்.

SHARP PHOTO
10, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.
சுன்னாகம் மார்க்கட் வழி முன்பா


ஈழநாடு 50 சதம்
The EELANAADU

# தெஹ்ரானிலுள்ள பிரிட்டிஷ் தூதர் வெளியேறினார்

[லண்டன்]
தெஹ்ரானிலுள்ள தனது தூதரை, பிரிட்டன் அரசாங்கம் திருப்பி அழைத்துள்ளது. அவசியமானால், ஈரானை விட்டு வெளியேறுமாறும் பிரிட்டிஷ் பிரஜைகளுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் நேற்று ஆலோசனை கூறியுள்ளது.


நியூ கேம்பிறிட்ஜ்
திருநெல்வேலி சந்தி
மேல்மாடி
ஆரம்பம் 5-5-80
க. பொ. த. உயர்தரம்
81, 82 ம் ஆண்டிற்கான வகுப்பு
கணக்கியல் பாலா மாஸ்ரர்
அளவையியல்: பிரபல ஆசிரியர்
பொருளியல்)
வர்த்தகம் ) சுப்பிரமணியம்
புவியியல்: ராஜா கோபால்
மேலதிக விபரங்களுக்கு
V. M. PACKKIYANATHAN.


## "பணயக் கைதிகளைப் பார்வையிடாதீர்"

### உறவினருக்கு கார்ட்டர் யோசனை

வாஷிங்டன், ஏப் 22
ஈரான் மாணவர்கள் வசம் உள்ள பணயக்கைதிகளை அவர்களது உறவினர்கள் பார்வையிடக்கூடாதென்று அமெரிக்க அதிபர் திரு ஜி மி கார்ட்டர் மீண்டும் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் பணயக் கைதிகளில் இளையவரான சார்ஜண்ட் கெவின் ஹெர்மனிங்கை அவரது தாயார் திருமதி பார்பரா ரிம் நேற்று தூதரகத்திற்குச் சென்று பார்வையிட்டார்.

பணயக் கைதிகள் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும் நீண்டநேரம் தாம் தமது மகனுடன் உரையாடியதாகவும் மாணவர்களுடன் தாம் எதுவும் கதைக்கவில்லை என்றும் திருமதி ரிம் தெரிவித்தார். [ஓ[

## மகேந்திர விழா நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)
பாஷையூர் புனித அந்தோனியார், சன சமூக நிலைய 'மகேந்திரவிழா' இன்றும் நாளையும் மூழுநாள்விழாவாக, பாஷையூர் அழகையா முத்தமிழ் அரங்கிலும், கடலலை மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

இன்று காலை 10 மைல் சைக்கிள் ஓட்டம், 5 மைல் மரதன் ஓட்டம், சிறுவர் பெரியோர் மரதன் ஓட்டம், உட்பட பல போட்டிகள் நடைபெறவுள்ளன.

மாலை நிகழ்ச்சிகளுக்கு, யாழ்ப்பாண மாநகர சபை மேயர் திரு. இ. விசுவநாதன் பிரதமவிருந்தினராக கலந்து கொள்வார். திரு எம். கே. அந்தனிசில், புலவர் அரியநாயகம் ஆகியோர் சிறப்புரையாற்றுவர் வழக்காடு மன்றம், நகைச்சுவை கதம்பம், நாடகம், கவியரங்கு ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

நாளை வியாழக்கிழமை காலை கயிறு இழுத்தல் போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெறும். மாலை நிகழ்ச்சிகளுக்கு யாழ்ப்பாண எம். பி திரு. வெ. யோகேஸ்வரன் தலைமை வகிப்பார். சிவத்தமிழ் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி திரு. த. சொக்கலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

'குற்றவாளிக் கூண்டில் கண்ணகி' என்னும் பொருளில் சட்டத்தரணி குழுவினரின் பட்டி மன்றமும், நடனம், நாட்டியம், இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [கெ]

## உலகயுத்த...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)
ளாளி வர்க்கமும் அனைத்து உழைக்கும் மக்களும் போராடிப் பெற்ற அத்தனை உரிமைகளும் படிப்படியாகப் பறிக்கப்படுகிறது

இலங்கையின் சுதந்திரமும், மக்களின் இறைமையும் அந்நிய ஏகாதிபத்தியவாதிகளுக்குக் கையளிக்கப்பட்டுள்ளது. உலக மூதலாளித்துவ அமைப்பின் பொருளாதார நெருக்கடியின் சுமையை இலங்கையின் தொழிலாளி வர்க்கத்தினதும், அனைத்து உழைக்கும் மக்களினதும் தோளில் சுமத்தியுள்ளதுடன், எண்ணற்ற அடக்குமுறைச் சட்டங்களால் விலங்கிடப்பட்டு அவர்களின் ஜனநாயக சுதந்திரங்கள் முற்றாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன.

மக்கள் விரோத அடக்குமுறை ஆட்சிக்கு எதிராகத் தொழிலாளி வர்க்கத்தினதும், அனைத்து மக்களதும் எதிர்ப்புணர்வைப் பிரகடனஞ்செய்ய மேதினம் ஒரு நல்ல சந்தர்ப்பமாகும். ஐக்கிய மேதினத்திற்காக எமது கட்சி எடுத்த முன்முயற்சி வெற்றிபெறாமற் போனது மிகவும் வேதனைக்குரிய விஷயமாகும். (கொ)

## ஆலோசனைக்கூட்டம்

(சாவகச்சேரி)
மிருசுவில், உசன் ஆகிய இரு கிராமசேவை அலுவலர்கள் பிரிவுகளுள் உப உணவுப் பயிர்ச் செய்கை பற்றியிருந்து வரும் முறைகளை மாற்றி அமுலாக்கல் பற்றிய ஆலோசனைக் கூட்டம் இம்மாதம் 26ம் திகதி பிற்பகல் மிருசுவில் ரோ. க. வித்தியாலய மண்டபத்தில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராசா தலைமையில் நடைபெறவிருக்கிறது. (அ)


# தாதியர் தேவை

அனுபவம் உள்ள, பயிற்றப்பட்டோர் தேவை. திருமணமாகாதவர் விரும்பத்தக்கது. நற்சாட்சிப்பத்திரங்களுடன் 1-5-80க்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

காரியதரிசி,
தனியார் வைத்திய சாலைகள்,
395, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். 5555


### உற்பத்தியாளர்களிடமிருந்து

# செத்தல்மிளகாய்

## ரூபா 10-50க்கு கொள்முதல்

[யாழ்ப்பாணம்[
யாழ். விற்பனைத் திணைக்களம் ஒரு ருத்தல் செத்தல் மிளகாயை, பத்துரூபா ஐம்பது சதத்திற்கு கொள்வனவு செய்கிறது.

மிளகாய்ச் செய்கையாளர்களை ஊக்குவிக்கவும் தரகர்களிடமிருந்து உற்பத்தியாளர்களைக் காப்பாற்றுவதற்காகவுமே யாழ். விற்பனைத் திணைக்களம் உற்பத்தியாளர்களிடமிருந்து கூடுதலான விலைக்கு மிளகாயைக் கொள்முதல் செய்ய முன்வந்திருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள தரகர்களும், கொழும்பு வியாபாரிகளும் உற்பத்தியாளர்களிடமிருந்து பத்து ரூபாவுக்கும் குறைந்த விலையில் மிளகாயைக் கொள்முதல் செய்து கொழும்புக்கு அனுப்பி கூடுதலான லாபத்தைப் பெறுகிறார்கள் என்று கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் மிளகாய், தரகர் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு பதுக்கிவைப்பதைத் தடைசெய்யவும், இங்கு உற்பத்தியாகும் மிளகாய் எக்காலத்திலும் நியாயமான விலையில் யாழ்ப்பாணத்து மக்களுக்கு கிடைக்கவும், உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைப்பதற்காகவுமே யாழ். விற்பனைத்திணைக்களத்தினர் உற்பத்தியாளர்களிடமிருந்து பத்து ரூபா ஐம்பது சதத்திற்கு செத்தல்மிளகாயைக் கொள்முதல் செய்யவுள்ளனர் என்று திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விற்பனைத்திணைக்களம் கிளைகளுக்கும், மக்கள் கடைகளுக்கும் உற்பத்தியாளர்கள் கொண்டுவரும் மிளகாயை மேற்குறிப்பிட்ட விலைக்குக் கொள்முதல் செய்யுமாறு விற்பனைத் திணைக்களத்தின்கீழ் இயங்கும் சகல கடைமுகாமையாளர்களுக்கும் யாழ். விற்பனைத்திணைக்கள உதவி ஆணையாளர் திரு எஸ். பாலசிங்கம் உத்தரவிட்டுள்ளார். (கொ)

## "எமது வீதியில் பஸ் ஓடவேண்டும் என்று மட்டும் நினைக்கக் கூடாது"

— அமிர்

(மாவிட்டபுரம்)
"மக்களது தேவையில் போக்குவரத்து மிகவும் அவசியமானது. போக்குவரத்துச் சேவையை இலகுவாக்குவதன் மூலம் அவர்கள் மற்றத் தேவைகளை விரைவாகச் செய்து கொள்ள முடியும். ஆகவே தான் புதிய பஸ் சேவைகளை ஆரம்பிப்பதில் நான் மிகுந்த அக்கறையுடன் செயல்படுகிறேன். அதற்கு உதவியாக இ. போ. ச. வட பிராந்திய தலைவர். டட்லி. குணசேகராவும் இயங்கியமையினால்தான் இந்த பஸ் சேவை கூடிய விரைவில் பெற முடிந்தது.."

இவ்வாறு மாவிட்டபுரத்திலிருந்து வீமன் காமம் ஊடாக மயிலிட்டி வரை செல்லும் 799 இலக்க புதிய பஸ் சேவை ஒன்றை ஆரம்பித்து வைத்த வைபவத்தில் பேசிய எதிர்க்கட்சிமுதல்வரும் காங்கேசன்துறை எம். பியுமான திரு! அ. அமிர்தலிங்கம் கூறினார்.

திரு நா. இராமலிங்கம் தலைமையில் வீமன்காமம் மகா வித்தியாலய முன்றலில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் மேலும் பேசும்போது கூறியதாவது:

இ போ. சபையின் அதிகாரம் பரவலாக்கப்பட்டுப் பிராந்திய சபைகள் அமைக்கப்பட்டபின் போக்குவரத்துச் சேவைகள் சீரடைந்துள்ளன. அத்துடன் புதிய பஸ்சேவைகளை ஆரம்பிக்க முன்னர் பெருங் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. எமது வீதியால் பஸ் ஓடவேண்டும் என்று மட்டும் மக்கள் சிந்திக்காது பஸ்சேவையை தாம் பயன் பெறும் விதத்தில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்" என்றார்.

வட பிராந்திய இ. போ. ச. தலைவர் திரு. டட்லி குணசேகரா பேசும் போது கூறியதாவது:-

"மக்களது சேவையையே குறிக்கோளாகக் கொண்டு நாம் செயல்பட்டு வருகிறோம் ஊழியர்கள், அதிகாரிகள் நல்லெண்ணத்துடன் கூட்டாகச் செயல்பட்டால் தான் மக்களுக்கு சேவையாற்ற முடியும், இதனை உணர்ந்து ஊழியர் கூடிய பலபிரச்சனைகளை தீர்த்த அதிகாரிகள், ஊழியர்களுக் கிடையில் இருந்த இடைவெளியை நீக்கியுள்ளேன். தொடர்ந்து மக்களது தேவைகளை நிறைவேற்றி வைக்க ஆவனசெய்வேன்" என்றார்

சட்டத்தரணி அ குமரகுரு, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் திரு. க. பாலசுந்தரம், வீமன்காமம் மகா வித்தியாலய அதிபர் திருமதி பி. சச்சிதானந்தம், திருமதி அமிர்தலிங்கம் ஆகியோரும் பேசினர். (அ)

## சமதர்ம...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ளாக முழுநேரமும், தமிழினத்தின் விடுதலைக்காக உழைத்து வந்திருக்கின்ற நான், மிகுந்த வேதனையுடன்தான் கூட்டணி பதவிப்பொறுப்புக்களிலிருந்து விலகுவதாக அறிவித்திருக்கின்றேன் ஆனால் தமிழ் இளைஞர் பேரவையிலிருந்து விலகவில்லை. இதனால் இது வரையும் கடைப்பிடித்துவந்த கூட்டணி-பேரவையின் நிலைப்பாட்டிலும் எவ்வித மாற்றமுமில்லை.

"இவ்வாறு நான் கூட்டணிப் பதவிப் பொறுப்புக்களிலிருந்து விலகியதற்கும், அண்மையில் ஏழாலையில் இடம்பெற்ற பட்டி மன்றத்தில் நாம் பங்கு பற்றியதற்கும் சம்பந்தமில்லை. இதுசம்பந்தமாக அறிக்கை, செய்திகள் வெளியிடுபவர்கள் கூட்டணிக்குள் பேசிக்கொள்ள வேண்டும் அல்லது பொறுப்புடன் தமது பெயரையும் சேர்த்து அறிக்கை வெளியிட வேண்டும். தமிழ்ழ விடுதலைக்கு விரோதமான சக்திகளுக்கும் சந்தர்ப்பவாதிகளுக்கும் எனது இச்செயல் பயன்படக்கூடாது.

"நான் த. வி. கூட்டணியிலிருந்து விலகியதற்கான காரணங்கள் இது[illegible] கூட்டணிப் பொதுச் சபை, மத்திய செயற்குழுவில் முன்வைக்கப்பட்டவைகள்தான். அதனை மீண்டும்எழுத்துருவில் பொதுக்குழுவுக்கும், மத்திய செயற்குழுவுக்கும் அனுப்பிவைப்பேன்.

"தமிழர் விடுதலைக் கூட்டணியை ஒரு முழுமையான விடுதலை இயக்கமாக அமைப்பதற்கும், தமிழ் இளைஞர் சமுதாயத்தை ஒரு போராட்ட சக்தியாகக் கட்டியெழுப்புவதற்கும் எனது இச்செயல் மூலமான போராட்டம், தமிழ் மக்கள் மத்தியில், குறிப்பாக இளைஞர் சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியையும், எழுச்சியையும் ஏற்படுத்திட உதவிட வேண்டும் முதலில் இளைஞர் அமைப்புக்களை உருவாக்கிடத் தொடர்ந்தும் முழுநேரமும் என்னை அர்ப்பணித்து உழைப்பேன் என உறுதிப்படுத்துகின்றேன்" என்று திரு. மாவை சேனாதிராசா தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## கனகரின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தரிசிக்க அன்னாரின் புதல்வர்களில் ஒருவரும் தற்போது விளக்கமறியலில் இருப்பவருமான ரஞ்சன் கனகரத்தினத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது

இவர் நேற்று கண்டி சிறைச்சாலையிலிருந்து மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டார். பாதுகாப்பு கருதி ஈமக்கிரியைகளில் பங்கு பற்ற அனுமதிக்கப்படமாட்டார் என்றும் பூதவுடலை மட்டும் தரிசிக்க அனுமதிக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. ரஞ்சன் கனகரத்தினம், செங்கலடி கிராமிய வங்கிக் கொள்ளை வழக்கு சம்பந்தமாக விளக்கமறியலில் இருக்கிறார். (ம)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்கு வீதி68-ம் இலக்க அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 23-ம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Registered as a News[illegible] at the General Post office Sri Lanka[illegible] No. [illegible] The Eelanaadu, Post Box No 49, Telegram 'Eelanaadu
Phone 280

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org